5

தென்மொழி

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

வி.சி.



தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

MAHARAJA SERFOJI'S SARASWATI ... TANJORE
RECEIVED
5 JUN 197

வேடிக்கையன்று விடுதலை!

கூடிக்கை கொட்டி முழக்கி
உரக்கக் குரல் கொடுத்தே
தேடிக்கை நீட்டித் திசையெலாம்
வேண்டித் தெரிந்ததுணை
நாடிக்கை கோத்துநம் நாடுதா
வென்றே நயந்திரக்க
வேடிக்கை யன்று விடுதலை;
வீரர் விளைப்பதுவே!

பாடிக்கை கூப்பிப் பராவிப்
புகழ்ந்து பணிந்திரக்க
வேடிக்கை யன்று விடுதலை!
வீழாத வீர மிக்க
நாடிக்குள் விம்மும் நரம்பிற்குள்
பாய்ந்திடும் நல்லரத்தம்
கோடிக்கு நூற்றுவர்க் கோடினும்
நாடு கொளப் பெறுமே!

சுவடி : 10

ஓலை : 1

விலை :
75 காசு

நமக்கு வந்த மடல்கள்.

0: 321: அன்புடையீர், தென்மொழிக் கொள்கைச் செயற் பாட்டு மாநாட்டுத் தொடர்பில் தங்கள் அழைப்பு மடல் கிடைத்தது. மன விடுதலையே எல்லா விடுதலைகட்கும் அடிப்படையும், முதன் முதல் மேற் கொள்ளப்பட வேண்டியதும் ஆகும் என்பது என் தெளிந்த முடிபு. மற்றும், இம் மாநாடு உண்மையாகவே தமிழர் நலம் கருதிக் கூட்டப் பெறுவதாகவும் எனக்குத் தோன்றவில்லை. இதனால் தமிழர்க்கோ, தமிழுக்கோ உண்மைப் பயன் விளையும் என்று என்னால் உணர முடியவில்லை. எனவே இம் மாநாட்டில் நான் கலந்து கொள்வதற்கில்லை என்பதை உங்கட்கு அறிவிக்கின்றேன். இம்மடலைத் தென்மொழியில் வெளியிட வேண்டுகின்றேன்.

—அன்புடன் **ம.** இலெ. தங்கப்பா, வில்லியனூர்.

0: 322: அன்புடையீர், நீர் தென்மொழி இதழில் ‘மாநிலச் தன்னாட்சி’ பற்றி எழுதியிருந்த சிறுபிள்ளைத்தனமான ஆசிரிய வுரையைக் கவனித்தேன். ஒன்றுமறியாத ஏழை மக்களுக் வெறியைத் தூண்டி, அதன் மூலம் சொந்த ஊதியம் தேடுப் முயற்சியே இது. உங்களைப் போன்ற முரடர்கள் ஆட்சிக்கு வந்தா சிறுபான்மையினரின் நிலையை எண்ணிப் பார்க்கவே அச்சமாயிரு கிறது. தேன்கிண்ணம், மதுக்கிண்ணம் போன்ற இதழ்களைத் த செய்ய வேண்டுமென ஒருவர் எழுதியுள்ளார். இந்த நாட்டில் எ இதழையும் வெளியிட, படிக்க மக்களுக்கு உரிமையுண்டு. அவ தடை செய்வதற்கு உங்களைப் போன்றவர்களுக்கு எந்த உரிமை மில்லை. இதுதான் நீங்கள் செய்தித்தாள் உரிமைக்கு வைத்திரு ம மதிப்பென்றால், மாநிலத் தன்னாட்சியே வேண்டா. இப்போது ள ஆட்சியே நிலைக்கட்டும்!

— எசு. எஃப் - சுந்தரராசு – ‘சைக்கோ’ திருச்சி–12.

0:323: தமிழ்ப்பாவல! வணக்கம். சின்னாட்களில் தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி நீக்கப்பட்டு வடவாரியப் பார்ப்பன இந்திராவினால் தமிழகம் அடிமைத் தளையில் பூட்டப்போவதுறுதி. வடவரின் வல்லாட்சியிலிருந்து தமிழகம் விடுதலை பெறவேண்டுமாயின் “நுணலுந்தன் வாயால் கெடும்” என்றவாறு வெற்று ஆரவார நீர்மைய உணர்வுரைகளையும் பிற சிறப்பான கடிதங்கள் அட்டை யில் வெளியிடுவதையும் நிறுத்தி விட்டு “உள்ளிருந்தே செய லாற்றும் வழியில்” இறங்க வேண்டும். உணர்ச்சியை மிகுந்த அளவில் உடைய நம் தமிழகத்தில் விரைவில் அடக்கப்பட்டு, இறுதியில் அடிமைகளாக்கப்படும் “கலகத்தை”த் தோற்றுவிப்பதை விட அறிவியக்க வழியில், அழிக்கவியலா, அடக்கவியலா, நன் முடிவுப் “புரட்சியை”த் தோற்றுவிக்க நீவிர் முயலவேண்டும்.

பச்சைப் படுகொலைகளாலும், செங்குருதிச் சிந்தலாலும், மறை முகச் செயலாக்கத் திறனாலுந்தான் தமிழகம் விடுதலையடையலாமே யொழிய, சோற்றுக்கே திண்டாடும் தனிப் பெருஞ்சித்திரனாராலும் வெற்று வாயுரையாலும், எழுத்துரையாலுமன்று. செங்காவல் செங் குருதிப்படையில்லாச் சீர்திருத்தச் சீரணவையோ, விடட்காங் கொரில்

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க]

தமிழ் நிலத்தை விடுவிப்போம்!

தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு

திருச்சிராப்பள்ளித் தேவர் மன்றத்தில்.

(10-6-72, 11-6-72 ஆகிய நாட்களில்)

புறப்படுங்கள் திருச்சிக்கு!

'தென்மொழி' எனும் இதழ்க்கு இரண்டு கொள்கைகள் உண்டு. 1. தமிழன் தன் மொழியாலும் இனத்தாலும் விடுதலை பெற வேண்டும் என்பது. 2. தமிழன் தன் நிலத்தாலும் விடுதலை பெற வேண்டும் என்பது.

மொழி விடுதலையும் இன விடுதலையும்:

உலகிலேயே முதன்மையானதும், ஆரியம், இலத்தீன், கிரேக்கம், சாக்சானியம் முதலிய உலகப் பழம் பெரும் மொழிகளுக்கெல்லாம் தாயானதும், பழம் இலெமூரியாக் கண்டத்து, ஏறத்தாழ ஐம்பதினாயிரம் (50,000) ஆண்டுகளுக்கு முந்தித் தோன்றியதும், முழுவளம் பெற்றதும், இன்றைய அறிவியலுக்கும் இனிவரப் போகும் அறிவியல் வளர்ச்சிக்கும் முழுதும் ஈடு கொடுப்பதுமாகிய நம் தமிழ் மொழி, கடந்த மூவாயிர மாண்டுகளாக ஆரியத்தாலும், பல வேற்று இன மொழிகளாலும் சிதைக்கப்பெற்றுத் தன் உருவிழந்து ஒலியிழந்து தானும் அடிமைப்பட்டுத் தன் இனத்தையும் அடிமைப் படுத்தித் தட்டுக் கெட்டுத் தடுமாறி, இன்று ஏதோ ஒரு வகையில் உருமாறி உயிர்வாழ்ந்து வருகின்றது. உலகில் வேறெம் மொழிக்கும் இல்லாத மூவகைப் பாகுபாடும், ஐவகை இலக்கணமும், எண்வகைச் சிறப்பியல்களும் கொண்ட நம் தமிழ் மொழியை ஆரியத் தளையினின்றும் பிறமொழிச் சிதைவினின்றும் மீட்டுக் காத்து வருவது தமிழர்களாகப் பிறந்த நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

இன்றோ, நாம் நம் தாய்மொழி 'தமிழ்' என்று கூறவும் வெட்கப்பட்டு நிற்கின்றோம். 'தமிழில் என்ன இருக்கின்றது?' என்று நமக்குள் நாமே ஒரு முழுமூடத்தனமான கேள்வியை எழுப்பிக் கொண்டு, ஆங்கில மொழிக்கும், பிற வட நாட்டு மொழிகளுக்கும் வால் பிடித்துக் கிடக்கின்றோம். நம் மொழியைத் தமிழ் என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்ள

முடியாத நாம், நம்மைத் தமிழரென்றும் கூறிக் கொள்ளத் தயங்குகின்றோம். நமக்குள் பல குலப்பிரிவுகளையும் கிளைப் பிரிவுகளையும் உண்டாக்கிக் கொண்டு, நம்மை நாமே அடையாளங் கண்டு கொள்ள முடியாதவர்களாக–நமக்குள் நாமே பகைமை பாராட்டிக் குத்திக் கொண்டும் வெட்டிக் கொண்டும் சாகுமாறு பலவகைப் பூசல்களை உருவாக்கி வருகின்றோம். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல், மொழியாலும் அதன் வழி இனத்தாலும் வேறுபட்டுக் கிடக்கும் நம்மை மொழியாலும் இனத்தாலும் தென்னாட்டு ஆரியப் பார்ப்பானும், பொருளாலும் அரசியலாலும் வடநாட்டு ஆரியப் பார்ப்பானும் ஏமாற்றி, அடிமைப்படுத்திக் காலங்காலமாய்ச் சுரண்டி வருகின்றனர்.

'சமசுக்கிருதம் இல்லாமல் தமிழ் இல்லை'; 'சமசுக்கிருதமே இந்திய மொழிகளுக்குத்தாய்'; 'அதுவே இந்திய ஒற்றுமைக்கு வழியமைத்துக் கொடுக்கும்' - என்றபடி இந்தியக் குடியரசுத் தலைவரை உள்ளிட்ட அனைத்து ஆரியத் தலைவர்களும் நாளுக்கு நாள் ஊருக்கு ஊர் உரத்த குரலில் முழங்கி வருகின்றனர். 'ஆளைக் கண்டு ஏமாறி வரும்' நம் அடிமைத் தமிழர்களும் நம் பெறலரிதாம் தமிழ் மொழியைப் புறக்கணித்துத் தம்மைத் தாழ்த்தியும் தம் இனத்தை வீழ்த்தியும் வருகின்றனர்.

இவ் வீழ்ச்சி நிலைகளினின்று தமிழன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமானால் அவன் தன் தாய்மொழியாகிய தமிழைத் தூய்மையாகவும், பிறசொல் கலப்பின்றியும் பேசி வருவதுடன், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போல் குல, சமய வேற்றுமைகள் இன்றி ஒரே குமுகாயமாக வாழவும் முயற்சி செய்ய வேண்டும்.

தமிழனின் நிலவிடுதலை:

உலக அடிமை வரலாற்றில் தமிழனின் வரலாறு மிகவும் இரங்கத் தக்கதான ஓர் இழிந்த வரலாறாகும். பிற நாட்டு இன அடிமைகள் அனைவரும் அரசியல் அடிமைகள் அல்லர். இனத்தால் அடிமைப்பட்டு அரசியலால் உரிமை பெற்ற மக்களும் உளர். தமிழன் இனத்தாலும் அரசியலாலும் அடிமைப் பட்டுக் கிடக்கின்றான்.

பிற அடிமை இனங்கள் ஏதோ ஓர் இனத்தால் மட்டுமே அடிமைப் படுத்தப் பட்டுக் கிடக்கின்ற வேளையில், தமிழினம் பல்வேறு இனங்களால் அடிமைப் படுத்தப் பட்டுக் கிடக்கின்றது.

பிற இனங்கள் ஏதோ ஒரு குறுகிய கால எல்லைக்கு அடிமை யுற்றுக் கிடப்பதும், பிறகு எழுச்சியுற்றுப் போராடி உரிமை பெறுவதும் வரலாறு. தமிழினமோ கடந்த மூவாயிர மாண்டுகளாக ஏதோ ஒரு வகையில் தொடர்ந்து அடிமையுற்றே கிடக்கின்றது. இதன் வரலாறே அடிமை வரலாறாகும்.

ஆரியரிடத்தும், மொகலாயரிடத்தும், பல்லவரிடத்தும், ஆங்கில ரிடத்தும், போர்த்துக்கீசியரிடத்தும், பிரெஞ்சுக்காரரிடத்தும் அடிமைப் பட்டுச் சிதைந்த தமிழினம், இன்று வடநாட்டாரின் கிடுக்கிப் பிடியில் சிக்கித் தவிக்கின்றது. வடநாட்டானுக்குக் கண்காணியர்க ளாக இருந்து பொறுக்கித்தின்னும் அடிமைத் தமிழர் ஒரு சிலரையும், மொழி, இன நலமற்றுத் தந்நல நெஞ்சினராக வாழும் கல்லுளித் தமிழர் ஒரு சிலரையும் தவிர, மிகப் பெரும்பான்மைத் தமிழர் தாங்கள் தங்கள் அடிமைத்தளையினின்று மீள வகை தெரியாதவராக அல்லற் பட்டே கிடக்கின்றனர்.

ஆட்சி அதிகாரங்கள் முழுவதும் வடவனின் கைப்பிடியுள் சிக்கிக் கிடக்கின்றன. இங்குள்ள மாநில அரசினர் வெறும் குழுத்தலைவர்களே! அரசியல் செயலாளர்களே!

இங்குள்ள பெருந்தொழில்கள் யாவும் வடவரின் கையுள்! நிறைந்த வருமானங்கள் தரும் துறைகள் அவர்களுக்குச் சொந்தம். ஊருக்குப் பெயர் வைப்பதானாலும் அவர்களைக் கேட்க வேண்டும்; உரிமைக்கு வாழ்த்துப் பாடுவதானாலும் அவர்கள் இசைவு தரவேண்டும்.

இங்குள்ள செல்வங்கள் ஏராளம்! நிலவளமும், மலைவளமும், கடல் வளமும் தமிழகத்துள் கொஞ்ச நஞ்ச மல்ல! இருப்பினும் இங்குள்ள தமிழன் வடநாட்டுச் சோம்பேறிகளுக்காகத் தன் வயிற்றைக் கட்டித் தீரவேண்டியிருக்கின்றது. அவர்கள் கொட்டிக் கொள்ள இவன் உழைத்துச் சாகவேண்டி யிருக்கின்றது.

இப்படி அரசியலாலும் பொருளியலாலும் அடிமைப்பட்டுத் தன் நிலையினில் என்றென்றும் ஏழையாகவே இருக்கும் தென்னாட்டுத் தமிழன் – திரவிடன் தன் இனத்தாலும் மொழியாலும் ஒன்று பட்டு எழுச்சி கொள்ளாதவாறு, பிரித்தாளப் பட்டும், அதிகாரத்தால் மடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் கிடக்கின்றான்.

தென்மொழிப் போராட்டம்!

இவ்வாறான அடிமை நிலைகளை அறவே மாற்றத் தென்மொழி இதழ் தூய பொதுவுணர்வுடன் கடந்த பதினான்கு ஆண்டுகளாகப் போராட்டம் நடத்தி வருகின்றது.

'தென்மொழி என்பது ஓர் இதழன்று; ஓர் இயக்கம்' என்னுமாறு அதன் கொள்கைகள் வளர்ச்சியுற்றுச் செம்மாந்து நிற்கின்றன. அதற்கென ஒரு கூட்டம்! அதற்கென ஓர் எழுச்சி! அதற்கென ஒரு பாசறை! அதன் செயலாண்மைத் திறம் தனி! அதன் படை மறவர்களின் போராட்டம் தனி! அகமுகமாக அவர்கள் செய்துவரும் நூற்றுக் கணக்கான முயற்சிகளின் இறுதிப் பயனாக அவர்களின் புறமுக முயற்சி இப்பொழுது முகிழ்த்துள்ளது!

ஆம்; அதுதான் வரும் சூன் மாதம் 10, 11-ஆம் நாட்களில் திருச்சித் தேவர் மன்றத்தில் நடைபெற விருக்கும் மாநாடு.

(10—6—72 காலை 7 மணி முதல் 12 மணி வரை ஊர்வலம். ஊர்வலம் திருச்சித் தேவர் மன்றத்திலிருந்து புறப்படும்.)

அன்று மாலை 2 மணிக்குக் குழுகாய மாநாடு தொடங்கும்.

இரவு 'எந்நாளோ' – கொள்கை நாடகம்.

11—6—72 காலை 8 மணி முதல் அரசியல் மாநாடு.

இரண்டு நாள் முடிவிலும் வரலாற்றுச் சிறப்புடைய இரண்டு சிறந்த தீர்மானங்கள் நிறைவேற்றப் படும்.

எனவே அம் மாநாடு, ஒரு செயலறிவிப்பு மாநாடு!

அஃது ஓர் உரிமைப் போராட்ட மாநாடு!

அஃது ஒரு விடுதலை மாநாடு!!

அது தாழ்வுற்ற தமிழர்களுக்கு விடிவு காணப் புறப்பட்ட தமிழர்கள் அனைவரும் ஒன்று கூடித் தங்கள் செயல் திட்டங்கள் பற்றி ஆயும் மாநாடு!!!

அதில் நீங்கள் — தன்மானமுள்ள தமிழராகிய நீங்கள் — கலந்து கொள்ள வேண்டாவா?

உடனே குடும்பத்துடன் அணியமாகுங்கள்!

தமிழ்நாடு தமிழர்க்கே என்ற முழக்குடன் புறப்படுங்கள்!

திருச்சியிலே ஒன்றிணைவோம்!

நினைவிருக்கட்டும் சூன் 10 – 11.

வாழ்க தமிழர்! வாழ்க தமிழ்நாடு!

தென்மொழி, கடலூர்-1.
1—5—'72
(தமிழகம்)

அன்புள்ள
பெருஞ்சித்திரன்
(மாநாட்டு அமைப்பாளன்)

Let Tamil Land be liberated!

Executive Conference of 'Thenmozhi'ism

at 'Thevar Mantram,' Thiruchirapalli,

on 10-6 72 & 11-6-72.

MARCH TO THIRUCHIRAPALLI!

"THENMOZHI" has two policies: (1) To free the Tamil, by language and race and (2) to liberate his land.

LINGUISTIC & RACIAL LIBERTY.- Tamil, the primary classical language of the world, and mother of all the world's great ancient languages, like Aryan, Latin, Greek, Saxon, etc. which appeared in the good old continent of Lemuria some 50000 years back, fully developed and rich enough for the present-day science and its future growth dominated for the past three thousand years, by Aryan and allied foreign languages, has lost its form and sonancy, made the Tamils slaves and is unrecognizable as it is. To free Tamil, that falls into three classes, has grammar of five kinds and eight special features which no other language can boast of, from the clutches of Aryan and other foreign languages and to keep up its pristine purity, is the bounden duty of each and every Tamilian.

Today we feel ashamed even to own Tamil as our mother-tongue. We not only raise such fully foolish questions like, 'What is there in Tamil?' but play the second fiddle to those who sing in praise of English and the languages of the North. We, who hesitate to proudly own Tamil as our language, hesitate not a little to say that we are Tamils. Having created divisions and sub-divisions of caste, we are unable to see who we really are;we also create inimical feelings that lead to internal quarrels. fightings

and bloodshed. As the saying goes like the acrobat joyous over the division in the village, The Arya Brahmin of the south is glad to get over us by language and caste and those of the North politically and financially, enslaving and living on us far too long.

"No Tamil without Sanskrit",' Sanskrit is the mother of all Indian languages.' 'that alone will lead to Indian unity'- is the loud, proud claim of all Aryan leaders, including the President of India, from day to day and place to place. The slavish Tamils eluded by the illusive appearance boycot our rare, sweet Tamil and thus belittle themselves and their race.

To save himself from the downfall thus created, a Tamilian has to maintain the purity of Tamil by speaking Tamil free from use of words of foreign languages and all those who claim Tamil as the mother-tongue should lead their life in society, as children of the same mother without caring for the differences in caste and creed.

Territorial Freedom of the Tamils

Deplorable is the history of the Tamils in the history of the world slaves. In other countries, people were slaves to caste and colour; they were not political slaves. There are those, who are politically free, though they may be slaves by caste; but the Tamils are slaves in caste and politics. When in other countries people are slaves to a particular race, the Tamils are slaves to different races.

History speaks of other races being slavish for a limited time and of revolutions that got them their freedom. Continued slavery in a way, for the last three thousand years, is the sad history of the Tamil slaves.

Ennerved by slavery under the Aryans, the Moghuls, the Pallavas, the English, the Portuguese and the French, the Tamil race is smarting under the vice-like -grip of the North Indians. Excepting those few Tamils who make a living by working for the North Indians and those who care for their ownselves, without caring for their language and race, the majority of the Tamils don't know how to get rid of the bond that enslaves them.

Administrative power is entirely in the hands of the Northerners and our provincial Government is made up of only council members. They are there only to carry out orders of the higher-ups.

All the industrial concerns here. are in the hands of the Northerners and good revenue yielding branches are theirs. Even to name a place needs their orders and to sing hymns of liberty needs their prior approval.

Our riches are enormous. Fertility, of the low and high lands and the sea, is not a little in Tamilnad. And yet a Tamilian, here, has to work hard for the easy going Northerner: He has to die to feed them.

Thus a Tamilian of the south who is politically and financially a slave has to be poor for ever and ever. In order that a Dravidian by race and language may not raise up united, he is parted, ennerved and enslaved by those in power.

Thenmozhi's struggle

Purely with the common good at heart. Thenmozhi has been carrying on its struggle for the past fourteen years to completely wipe off this slavish state.

"Thenmozhi" is not a journal: like those of an organisation its policies fully developed, stand out proudly. It has

a good following, an upheaval and its own camp. Its executive powers are special. The way its soldiers fight is unique.

The result of hundreds & hundreds of their subjective trials is the present objective budding.

Yes; it is the ensuing Conference, to come off on the 10th & the 11th June 72 at the Thevar Hall, Tiruchi.

10—6—72 7. A. M. to 12 Noon:- Procession (will start from the Thevar Hall, Tiruchi)

2. P. M. Social Conference.

Night:- Drama-"Ennalo"-(when?)-(on Policy)

11—6—72 8. A. M. Political Conference.

At the close, on both days, two good resolutions of historical importance will be passed.

So the conference will be one to announce action. It is a conference to fight for our Rights.

It is a FREEDOM Conference.

It is a conference where all the Tamils meet to chalk out how best to end their low state.

Is it not right that you - a self respecting Tamilian join it?

Get ready to start AT ONCE with your family. Start with the slogan "TAMIL NADU for the TAMILS"

We will meet united at TIRUCHI.

Forget Not June 10, & 11.

Hail The Tamils! Hail, TAMIL NADU.

'Thenmozhi
Cuddalore—1.
Thamizhagam
1—5—72

Ever yours, in service'

Perunchithiran.
Convener.

தென்மொழி

இலக்கிய ஏடு

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே தமிழா தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 10: ஓலை: 1.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

மேழம் தி. பி. ௨00௩ – (ஏப்-மே.– 1972.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1 தமிழகம்.

தமிழ இனமே! தமிழ இனமே!

தமிழ இனமே!
தமிழ இனமே!
கமழக் கமழக்
கழகக் காலத்து
ஓங்கிய வாழ்க்கை
தாங்கி யிருந்து,
நீங்குதல் அறியா அடிமை நிலைபெறத்
தாழ்ந்து கிடக்கும் தமிழ இனமே!
வாழ்ந்து கிடந்த வரலாற்றைப் புதுக்குவாய்!

உனைவிழிப் பிக்கவும் உனைவாழ் விக்கவும்
உனையிவ் வுலகத்துள் உரிமை இனமெனப்
பட்டயங் கட்டிப் பழம்புகழ் மீட்கவும்

கொட்டிய முரசம் எத்தனை தெரியுமா?
கூக்குர லிட்டவர் எவர்எவர் அறிவையா?
ஏக்கமுற் றுன்னை எழுக எழுகென
எழுதிக் குவித்த கைகள் எத்தனை?
தொழுது வேண்டிய வாய்கள் எத்தனை?

தோளை உலுக்கித் தூக்கி நிறுத்தி
'வாளைச் சுழற்றடா' என்றுனை வாழ்த்திய
பாட்டின் வேந்தன் பாரதி தாசற்கு
நீட்டி முழக்கி விழாநிகழ்த் தினையே!
என்ன பொருளில் இவ்விழா வெடுத்தாய்?
சொன்னவன் பாட்டின் சொற்பொருள் என்ன?
என்ன சொன்னான்? எவர்க்கவன் சொன்னான்?
இன்ன விளக்கங்கள் எல்லாம் அறிவையா?

குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கும்
முட்டாள் தமிழனே! மூடப் பிறவியே!
ஒன்றுகேள்; நீயோர் ஊமைய னல்லன்;
தொன்றுதொட் டடிமைத் தொழும்பனு மல்லன்!
அன்றுன் தமிழ்க்கொடி பனிமலை ஆண்டது.
இன்றுன் தமிழ்த்தலை இந்திக்குத் தாழ்ந்தது.
வடவரின் தொடர்பால் மானமும் வறண்டது!
தொடவும் கூசித் தோளைச் சிலிர்த்தவன்
திட்டத் திட்டப் பல்லொளி தெரிக்க,
தொட்டுத் தொட்டுச் சிரித்துப் பழகுவாய்!
நீயோர் அடிமை என்பதை நினையாய்!
பாயோ தரையோ படுத்துத் தூங்குவாய்!
படைத்ததை உண்ணப் பழகிக் கொண்டனை!
கிடைத்ததில் உள்ளக் கிறக்கம் கண்டனை!

உரிமை வேண்டிக் கேளடா என்றால்
உரிமைக்குப் பொருளென்ன என்று கேட்கிறாய்!
உரிமைக்குப் பொருளே உரிமை என்பதை
நரியும் நாயும் நன்றாய் உணருமே!
கட்டிய நாய்க்குக் கழுத்து முட்டக்
கொட்டி வளர்க்கினும் குரைத்துக் குரைத்துக்
தன்னுரி மையினைத் தவறாது முழக்குமே!
உன்னுரி மைக்கோ உளவு கேட்கிறாய்?

உலக இனத்துள் உன்னினம் ஒன்றுதான்
பலநெடுங் காலமாய் அடிமைப் பட்டது!
குடிமை தளர்ந்தது; பண்பு குலைந்தது;
மிடிமை சான்றது; மேல்வர மறந்தது!

தமிழனே இதுகேள்! உன்னினம் தாயினம்!
அமிழ்தெனும் உன்மொழி அனைத்தினும் தாய்மொழி!
உன்நா கரிகம், உன்பண் பாடே
எந்நா கரிகத் தினுஞ்சிறந் திருந்தது!
உன்றன் பண்போ ஒருதனிப் பண்பாம்!
உன்றன் அறமும் அரசியல் அமைப்பும்
என்றும் பொருந்திப் பொதுமை இயல்வது!
ஒன்றும் பொதுமை புதிய தில்லையே!
காரல் மார்க்சு கண்ட பொதுமையைப்
பாருக் குரைத்தது பழம்பெருந் தமிழே!
இந்தப் பொதுநிலை கழகநூல் உரைக்கும்!
அந்த வரலாறு அடியொடு மாறியே
இன்றைய அடிமை இனவர லாறாய்க்
குன்றிக் குலைந்து கொடுமைப் பட்டதே!

உரைக்கக் கேளிதை; உன்னினம் இன்றோ
அரைக்காணி நிலத்தையே அளப்பருஞ் சொத்தாய்க்
கருதிக் கொண்டு கவலாது கிடக்கும்!
பெருநிலம் உனக்குச் சொந்தம் என்பதோ,
மொழிவழி உன்னுடை முன்னோர் அதனையே
வழிவழித் தாயமாய் வைத்தனர் என்பதோ,
அடிமையாய்ப் போனபின் அறிந்திலை நீயே!
தடிமையாய்ப் போனதுன் தோலும் மானமும்!
விடியாத் தமிழனாய் வீழ்ந்து கிடப்பாய்!
படியாய்ப் போனதுன் முதுகு, பாரடா!

ஆரியன் வந்தான்; அரசைக் குலைத்தான்!
ஊரிலே புகுந்துன் உறவைக் கெடுத்தான்!
தமிழனாய் வாழ்ந்தவன் தலைத்தலைப் பிரிந்தே
உமிழத் தக்க ஒருநூறு குலமாய்ப்
பிரிந்து தன்பழம் பெயரையும் மறந்தான்!
உரிந்து தள்ளினான், ஊசைப் பார்ப்பான்!
குலத்தைக் காட்டிக் குனி, நீ என்றான்;
நிலத்தைக் காட்டி நிமிர், உழை என்றான்!

குனிந்தாய் நிமிர்ந்தாய்; குடுமியன் சொற்குப்
பணிந்தாய்; படுத்தாய்; பற்பல கதைகளைச்
சொல்லிக் கிடந்தான்; சொக்கிப் போனாய்!
கல்லி எடுத்தான் மூளையை! கவன்றிலை!

சொல்லில் செயலில் வல்ல நீ, அதன்பின்
பல்லி சொல்லுக்குப் பயன்கேட்டு நின்றாய்!
கல்லை நிமிர்த்திக் கடவுள் என்றாய்!
பொல்லாப் பழங்கதை புழக்கத்தில் வரவும்
கொள்ளை போனதுன் பழந்தமிழ்க் கொடிமரம்!
மொள்ளைகள் பற்பல வந்து முளைத்தன!
வேதியர் வேதம் விண்ணையும் ஆண்டது!
சாதிச் சண்டைகள், சமயச் சழக்குகள்,
கல்வியில் வீழ்ச்சி, கடமையில் தொய்வு
செல்வத் தாழ்ச்சி, சீரழி வெல்லாம்
படிப்படி யாகப் பழக்கத்தில் வந்தன.
பொடிப்பொடி யாகப் போனதுன் பெருமை!

அதன்பின், களப்பிரன், பல்லவன், மராட்டியன்,
புதிதாய் அரபியன், போர்ச்சுக் கீசியன்,
பிரெஞ்சுக் காரன் யாவரும் முறையே
அரசாண்ட பின்னை ஆங்கிலன் வந்தான்!
அதற்குள் உன்றன் அடிநிலை மறந்தது.
உதைகள் வாங்கி வாங்கி உன்றன்
தோலும் மரத்தது; தோள்கள் சூம்பின!
காலும் மடிந்தது; கைகளும் ஓய்ந்தன!
ஆகவே கிண்ணிச் சோற்றுக் கலந்தாய்!
சாகக் கிடந்தவன் உன்றனைச் சாகாது
காத்ததும், கல்விக் கண்ணைத் திறந்ததும்,
மீத்த தடயத்தால் பழம்வர லாறு
காட்டி, மொழித்திறன் கணித்ததும், உயிர்ப்பினை
மீட்டுக் கொடுத்ததும், பார்ப்பன மேட்டிமை
வீழ்த்தி உனக்கு விலக்குக் கொடுத்ததும்,
தாழ்த்திய உன்றன் தலையை நிமிர்த்ததும்
ஆங்கி லேயனே!
ஆயினும் வடவன்
தூங்கிய உன்றன் தொடையிலே கயிற்றை
நன்றாய்த் திரித்தான்; நாடு பெறுகையில்

'ஒன்றே யாமென' உன்னையும் இணைத்துப்
பொன்றா உன்றனிப் போக்கைத் தடுத்துத்
தமிழ அம்மியை வடக்குக் குழவியால்
திமிரத் திமிர அரைத்துத் தேய்க்கிறான்!
அம்மி தேய்ந்தபின் முதுகிலும் அரைப்பான்!
உம்மென நீதான் ஊங்கொட் டுவையே!

இத்தகு போக்கில் மொழியையும் இழந்து,
மொத்தமாய் உன்றன் மூளையும் இழந்து,
சொத்தெலாம் இழப்பாய் என்றே சொன்னால்,
*செத்தையும் சருகும் செருப்பும் போல
ஒத்துழைப் பதுவே ஒற்றுமை என்பாய்!
மெத்தவும் உன்றன் மேனி தடித்தது!

இனித்தமிழ் நாடே இந்தியத் தினின்று
தனித்துப் போவது தக்கதாம் என்றால்,
அரசியல் அடிப்படை என்னென ஆய்ந்தே
உரசிக் கேட்பாய்; உண்மை உணர்கிலை.
பொருளியல் அடிப்படை புகலுக என்கிறாய்!
மருளுமுன் மனத்தினை என்னென மதிப்பேன்;

தமிழகம் பிரியா திருப்பது தவறெனற்
கமிழாக் கரணியம் பத்தென அறைக!

ஒன்றே, தமிழ்மொழி உயர்நிலை கெடுமே!

இரண்டே, இந்தி என்றையும் புகுமே!

மூன்றே, சமயமும் குலமும் ஊட்டிய
ஆன்ற புரட்டினை அகற்றலும் அரிதே!

நான்கே, பார்ப்பனர் நச்சுத் தன்மையால்
தீங்குறும் இனத்தினைத் தேற்றலும் அரிதே!

ஐந்தே தமிழ்ப்பண் படியகன் றொழிமே!

ஆறே, தமிழ்மொழி இலக்கிய இலக்கணம்
வேறு வேறாய் விலகி யழியுமே!

---

*செத்தை — குளிர்காய்பவனுக்கு உதவுவது.
சருகு — எருவாட்டி தட்டுவோனுக்கு உதவுவது.
செருப்பு — மிதிப்போனுக்கு உதவுவது.

ஏழே, சமசுக் கிருதம் எழுந்து
பாழெனத் தமிழரை அடிமைப் படுத்துமே!

எட்டே, தமிழினம் இனியும் சிதறிக்
கெட்டுப் படிப்படி கீழ்மையுற் றழிமே!

ஒன்பதே, பொதுநிலை யுடைமை நிரம்பிய
மன்பதை இங்கு மலர்த்துதல் அரிதே.

பத்தே, அரசியல் அதிகார நிறைவே
எத்தானும் எய்தல் இயல்வதா காதே.

இத்தகு வியலாமை என்றும் இருந்திட
ஒத்ததுன் உளமெனில் ஒற்றுமை பேசலாம்!
இத்தளை நீக்கி எதிர்கா லத்துப்
புத்துணர் வெய்திடும் புதுக்குமு காயம்,
தோற்றிட வேண்டும் என்பையேல் அரசினை
மாற்றிட வேண்டும்! இந்நிலை மறுத்தே
ஒற்றுமை ஒற்றுமை என்றே உரைப்பது
வெற்றுரை மட்டு மன்று; வீணுரை!

ஒன்றை மட்டும் நினைவில் ஊன்றுக.
என்றைக் கென்னினும் எவரிடத் தென்னினும்
அரசியல் நலன்கள் ஆயிரம் வரினும்
பொருளியல் நலன்கள் பூத்துக் குலுங்கினும்
உரிமை யில்லாத் தமிழகம் தமிழர்க்குக்
கருவில் லாத கழிநிலை மலடி!

'துறக்கமே எனக்குச் சிறையாக வாய்ப்பினும்
இறப்பத் தாண்டிக் குதிக்கவே விரும்புவேன்'
எனுமோர் அறிஞன் இயம்புதல் தெளிவாய்!
பினுமுன் பேதைமை பேசுவ தொழிவாய்!

ஆகவே தமிழனே! அழைக்கின் றேன், உனை!
சாகவே என்னினும், விடுதலைச் சாவே!
இன்றைத் தமிழகம் அடிமைவிட் டெழுந்தால்
பின்றைத் தமிழகம் பெரும்பயன் எய்தும்!

உன்னை விடுதலைக் கொப்புவித் திடுக!
அன்னை நாட்டினை விடுதலை செய்க!
முன்னைப் பெரும்புகழ் உலகெலாம் முழக்குக!

என்னைக்கும் என்னை இனத்திற்கும் என்னைப்
பின்னைக்கும் யானே பெரும்புகழாய் நின்றேனென்
றன்னைக்கும் சொல்லி அத்தனுக்கும் சொல்லி,
உன்னைக்கும் உன்னின் உழைக்கும் உறவுக்கும்
பன்னி யுரைத்துப் பலவா றெடுத்துரைத்து
மின்னிப் புறப்படுக மேனிலையை
உன்னி நடந்திடுக, உறுபயன் விளையவே!

—பெருஞ்சித்திரன்.

இந்தி எதிர்ப்பு மறவர்
ஈழத்தடிகட்கு நன்கொடை

[பட்டியல்: 3]			தொகை
49.	திரு.	பெ. வ. இராதா, பொள்ளாச்சி	5—00
50.	,,	க. முத்துசாமி, ,,	2—00
51.	,,	க. குப்புசாமி, ,,	2—00
52.	,,	எழில்மாறன், நரிக்கல்பட்டி	3—00
53.	,,	அன்பு.ந. வை. இளஞ்செழியன், அம்மையன் பட்டி (தஞ்சை)	5—00
54.	,,	சு. கிருட்டிணன், அரசினர் மாணவர் விடுதி, நாங்குநேரி (நெல்லை)	2—00
55.	,,	கடம்பன் குளம் சாகுல், ,,	2—00
56.	,,	பெரும்பத்தூர் சு மணி ,,	1—00
57.	,,	முத்துலிங்கம், கயம்பாக்கம்	10—00
58.	,,	பொ. இளங்கோ, மருத்துவக் கல்லூரி மாணவரில்லம், சென்னை	10—00
59.	,,	ச.ப. அண்ணாமலை, மின்வாரியம், புதுச்சத்திரம்	2—00

திருமண அன்பளிப்பு

பறம்புக்குடி திரு. செ. சுப்பையா அவர்கட்கும் செல்வி பானுமதி அவர்கட்கும் விடை 9-ஆம் பக்கல் நடந்த திருமணத்தின் நினைவாக அவர்கள் தென்மொழி அன்பர் நயினார்கோவில் திரு. அ. தங்கராசன் அவர்கள் வழி, தென்மொழிக்கு அனுப்பிய அன்பளிப்பு உரு. 11—00-ம் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்பெற்றது. மணமக்கள் நலமுடன் நீடுவாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

—அமைச்சர்.

தமிழகம் பிரிய வேண்டுவதற்கான பத்துக் கரணியங்கள்

தமிழகம் இந்திய வரசினின்று பிரியாம லிருக்குமானால்......

1. தமிழ்மொழி உயர்வடைய வழியில்லை. (பலவகையிலும் முட்டுக் கட்டைகள் இருந்து கொண்டே இருக்கும்.)
2. இந்தியை விலக்கவே முடியாது. (என்றைக்கேனும் ஒரு நாள் ஏற்க வேண்டியே தீரும்.)
3. குல, சமயப் புரட்டுகள் என்றைக்கும் அகலா.
4. ஆரியப் பார்ப்பன நச்சுத் தன்மை இருந்து கொண்டே இருக்கும்
5. தமிழ்ப் பண்பு படிப்படியாகக் கெடும்.
6. தமிழ்மொழியின் இலக்கண இலக்கியம் அழியும்.
7. சமசுக்கிருதம் தலையெடுக்கும்.
8. தமிழினம் மேலும் சிதறுண்டு போகும்.
9. பொதுவுடைமை யரசமைப்புக்கு வழியே இல்லை.
10. அரசியல் அதிகாரங்கள் தன்னிறைவு பெறா.

தமிழகப் பிரிவினைக் கொள்கை

1. இப்பொழுதுள்ள தமிழ்நாட்டையும் புதுவை, காரைக்கால் பகுதிகளையும் நடுவணரசுத் தொடர்பினின்று விடுவித்துத் தன்னுரிமை பெற்றதும் சட்டம், ஆளுமை இவற்றில் புதிய முறை வகுத்துத் தனியாட்சி செய்வதும் இந்திய அரசோடு நிலக்காவல் இணைப்பும் வாணிகத் தொடர்பும் கொண்டதுமாகிய தனித்தமிழ் நாடாக இயங்கச் செய்தல்.

2. தன்னுரிமைத் தமிழ்நாடு அமைக்கப் பெற்றபின் அண்டை அயல் மாநிலங்களை நட்பு நாடாகக் கருதி, இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு, முன் இழந்துபோன திருப்பதி, தேவிகுளம், பீர்மேடு முதலிய பகுதிகளை மீட்டுத் தமிழகத்துடன் இணைப்பது.

3. உரிமை பெற்ற தமிழகத்தில் குல, மத வேறுபாடற்ற பொதுமைக் குமுகாய அமைப்பும், நிகரமைப் பொதுவுடைமை சார்ந்த பொருளியல் அமைப்பும், குடிவழிக் குழுவாட்சி அரசியலமைப்பும் ஏற்படுத்தப் பெறும்.

(இவற்றின் விரிவான விளக்கங்கள் பின்னர் வெளியிடப் பெறும்.)

திருச்சி மாநாடு வழிகோலும்.

(ஈழத்து அடிகளின் மடல்)

மதிப்புயர் பெருஞ்சித்திரனுர் அவர்களுக்கு

பேரன்புடையீர், வணக்கம்.

'தென்மொழி' 9-ஆவது சுவடியின் 12-ஆவது ஓலை கிடைக்கப் பெற்றேன்.

"நேரம் வந்து விட்டது! படைமுகத்துக்கு வாருங்கள்" என்ற தலைப்பில் தாங்கள் எழுதியுள்ள தலைமைக் கட்டுரை என்னைப் பெரிதும் கவர்ந்தது.

திருச்சியில் நடைபெற இருக்கும் மாநாடு தங்கள் கருத்தை நிறைவேற்ற உதவும் என்று உறுதியாக நம்புகிறேன்.

முன்பொருமுறை, அஃதாவது-1937-இல் திருச்சியில் நாவலர் பாரதியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில், "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற தீர்மானம் நிறை வேற்றப் பட்டது.

அதனையடுத்து, வேலூரில், வயவர். அ. பன்னீர்ச்செல்வம் அவர்கள் தலைமையில் நடை பெற்ற தமிழர் மாநாட்டிலும், தமிழ்நாடு தமிழருக்கே என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, "தமிழ்நாடு தமிழருக்கே" என்று அச்சிடப் பட்ட அட்டைகள் தமிழ்நாடெங்கும் அனுப்பப் பட்டன. என்ற போதிலும், அந்தச் சீரிய முயற்சி செயல் பட முடியாமல், அவ்வப்போது தோன்றிய அரசியல் சூதாட்டக்காரர் களால் தடுக்கப் பட்டு விட்டது.

அதன் பிறகு, அறிஞர் அண்ணு அவர்கள் "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற முழக்கத்தை எழுப்பி, நாடெங்கும் உலவ விட்டார். அதற்குத் தடை வரவே அந்த முயற்சியும் கைவிடப் பட்டது. அதன் பிறகு, மொழிவழி ஆளும் உரிமை கேட்கப்பட்டது: அஃதாவது, தெலுங்கு மக்களும் மலையாள மக்களும் ஆட்சி நடத்து வது போன்ற ஆட்சியைத் தங்களுக்கும் தர வேண்டும் என்று தமிழகம் கேட்டது. அதன்படியே தில்லி அரசு அந்தப் பொறுப்பை வழங்கியது.

ஆனல், தேரில் அமர்ந்திருக்கும் அரசரின் கட்டளைப்படி தேர் ஓட்ட முடியாதவாறு, தில்லி அரசு அந்தத்தேரை ஓட்டும் பொறுப்பைத் தன்னிடமே வைத்துக் கொண்டுள்ளது.

இப்பொழுது 'மாநிலத் தன்னாட்சி' தாருங்கள் என்று தில்லி அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அஃதாவது, "அதிகாரங்களை நீங்கள் வைத்துக் கொண்டு, எங்களைப் பொம்மைகளைப் போல் தேரில் அமர்த்திவிட்டு, உங்கள் விருப்பம் போல்தேரை ஓட்டுகிறீர்கள்; இதனை நாங்கள் ஏற்கமுடியாது. ஆகையால், எங்களுக்கு மாநிலத் தன்னாட்சி தாருங்கள்—அஃதாவது. எங்களுக்கு மிகுதியான அளவில் அதிகாரங்களைத் தாருங்கள்—ஆனால் 'பிடி' உங்களிடமே இருக்கட்டும்" என்று கெஞ்சிக் கேட்கிறார்கள். இவர்கள் இப்படிக் கேட்பதை நோக்குமிடத்து, ஒன்று வெளிப் படையாகத் தெரிகின்றது.

அஃதாவது, எங்களுக்குப் பதவியும், குறிப்பிட்ட சில அதிகாரங்களும் இருந்தால் போதும்; மற்றப்படி, நாடு நமதாக வேண்டும். அதனை நம்மிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று கேட்கவில்லை, என்பது தெளிவாகத் தெரிகின்றது'

இந்த நிலையில், மாநிலத் தன்னாட்சிக்கும் தில்லி அரசு தடை போட்டு விட்டால், இவர்கள் "இருப்பதை வைத்துக் கொண்டு காலத்தை ஓட்டுவோம்" என்று வாளா இருப்பார்களே தவிர, அதற்கு மேல் ஓர் அடிகூட முன் வைக்க மாட்டார்கள் என்பது இதற்கு முன்னர் இவர்கள் நடந்து கொண்ட முறைகளிலிருந்து வெள்ளிடை மலையெனத் தெளிவாகத் தெரிகின்றது.

எனவே, தமிழ்நாடு தனி ஆட்சி பெறவும், தமிழ் மொழி தனித்தியங்கவும், தமிழ் மக்கள் விடுதலை வீரர்களாக வாழவும் திருச்சி மாநாடு வழிகோலும் என்று நம்புகிறேன்.

வாழ்க தமிழ்! வெல்க தமிழ்நாடு!

அடிகள்

தென்மொழி, கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50உருபா	14உருபா
அரையாண்டுக் கட்டணம்:	5உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

மேகலை

ம. 146 வருகின்றோம்! வருகின்றோம்!

விதைகள் அனைத்துமே விளைந்துவிட வேண்டும் என்பதுதான் உழவனின் ஆவல். ஆனால் பறவைக்கு இரையானதும், எலிக்கும், எறும்பிற்கும் உணவானதும் போக எஞ்சியதான பத்துக்கு ஒன்றுதான் விளைகின்றது. விளைகின்ற ஒவ்வொன்றும் ஒன்றுக்கு நூறாக விளைகின்றது. உழைத்தவனும் நெஞ்சு நிறைகின்றான்.

விடுதலை உழவர்களாகிய நமக்கும் தமிழ் நிலத்திலுள்ள பொருளுடையோர், வாழ்வில் இருள் அடைந்தோர், பொறி இயல் கற்றோர், போற்றத்தக்க அறிவுடையோர், மாணவ மணிகள், மருத்துவ அன்பர்கள், வணிக நண்பர்கள், வேலை கிடைத்திடாமல் வெந்துழலும் வேங்கைகள் ஆகிய அனைவருமே நம்மோடு இணைந்து ஒரு 'குறுகிய காலம் வரை' தங்கள் இறுகிய நெஞ்சையும் உடலையும் தமிழ் அன்னையின் விடுதலைப் பணிக்குப் படையல் பொருளாக்கி விடுதல் வேண்டும் என்ற வேணவா நெஞ்சில் பொங்கி எழுகின்றது.

ஆயின் தமிழ் நிலத்தில் வந்தேறிய வல்லூறுகளின் 'திருப்பணியை' எண்ணும்போது பத்துக்கு ஒன்றுதான் தேறும் என்ற நெஞ்சு நோகும் உண்மையை நம்மால் உணராமல் இருந்திட முடியவில்லை.

பத்துக்கு ஒன்றானாலும் வருகின்றவர்கள் தங்கள் பற்றுகளை அறுத்தெறிந்துவிட்டு வருவார்களே ஆயின் பலன் ஐயத்திற்கு இடமின்றி ஒன்றுக்கு நூறாக இருக்கும்.

வீரம் மிக்கோர்தாம் இப்பெரும் பணிக்கு வருவர் என்பதில் ஐயமில்லை. அவர் நெஞ்சில் 'ஈரம்' இருந்தால் அதனைத் துடைத்தெறிவதே சாலவும் நன்று. ஏனெனில் ஈரம், நேரம் கெட்ட நேரத்தில் சாரம் போய்விடும் என்பது வரலாறு கூறும் உண்மை.

இத்தனை வெறியோடு இவ்வேள்வித்தீயை விண்முட்ட எழுப்ப நினைப்பதற்குரிய காரணியங்கள் என்ன? என்று கேட்போர் இன்னும்(!) தமிழ் நிலத்தில் இல்லாமல் இல்லை.

இவர்கள் இருவகையினர். ஒரு சாரார் உள்ளபடியே ஏதும் அறியாதவர்கள்; மற்றவர்கள் முதல் வகையினரை ஏமாளிகளாக வைத்திருப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் உள்ள எல்லாம் அறிந்தவர்கள். அறிஞர்கள் கூறாத எதையும் நாம் புதியதாக சொல்லிவிடப் போவதில்லை.

பெறுவதற்கும் கொடுப்பதற்கும் தமிழகம் மறுக்கவில்லை. ஆனால் இங்கிருந்து எடுப்பது என்பது வேறு. அஃதும் 'உரிமையோடு எடுப்பது' என்பதற்கு அரசியல் அகரமுதலியில் 'அடிமைப் படுத்துவது', அல்லது 'சுரண்டுவது' என்றுதான் பொருள்படும்.

வடநாட்டு வயவேந்தர்கள் பெறுவது கொடுப்பது என்னும் நிலை எல்லாம் கடந்து நம்மிடம்-இருந்து எதையும் 'உரிமையுடன் எடுப்பது' என்னும் நிலைக்குத் தங்களை மாற்றிக் கொண்டுள்ளார்கள் ஆகவேதான் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள இவ் வடிமை நிலையினை உடைப்பது என்னும் முடிவுக்கு நாம் வரவேண்டியவர்களானோம்.

"அதைக் கெடுப்பது என்னும் முடிவோடு நாங்களும் இருக்கின்றோம்' என எல்லாம் தெரிந்தவர்கள் முனகுவது நம் செவியில் கேட்காமல் இல்லை. அந்த 'நல்லவர்களை' எந்த நேரத்தில், எந்த முறையில், எந்த அளவிற்குக் 'கவனிக்க' வேண்டும் என்பதைத் தமிழ் மறவர்கள் நன்கறிவர்.

நம்மில் பலர் அன்று காஞ்சித்தலைவனால் கண் திறக்கப்பட்டவர்கள். இன்று கடலூர் அறிஞர் "கண்ணைத் திறந்தாய்; கயவர்களை அறிந்தாய்," எனப்பகன்று நம் கைகளில் வேலினைத் தந்து அதை வீசிவிட வேண்டிய முறையையும் இடத்தையும் நெஞ்சில் பதியும் முறையில் கூறி நம்மைத் (தவறான பாதையில் இருந்து) தடுத்து ஆட்கொண்டுள்ளார் எனில் அதில் எள் அளவும் மிகை இல்லை.

"யார் ஆற்றல் சிறந்தது? என்னும் போரில் நம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ள இந்நேரத்தில் (வந்தேறிகளின் வலிவான) 'பேராற்றலை' நம் உள்ள வேந்தன் எடுத்து இயம்புதல் அத்தனைச் சிறப்பன்று" என்னும் எளியவர்களான நம் எண்ணத்தையும் அவர் எண்ணிடுவார் என நம்பிவிடுவோம்.

கனிந்த காலம் கடுகி வருகின்றது. துணிந்த நெஞ்சங்கள் பெருகி வருகின்றன. உறுதி படைத்தோர் அனைவருமே விடுதலைப் பயிருக்குத் தங்களை உரமாக்கிக் கொள்ளும் திறம் பெற்றுக் கொண்டுள்ளனர்.

உயர்ந்த மலைகளையும், ஓயாத அலைகளையும் எல்லைகளாய்க் கொண்ட இந்நாடு 'வேட்கை' மட்டும் கொண்டால் விடுதலை எட்டாக்கனி அன்று.

எட்டும் நிலையில் உள்ள அக்கனியைக்காண, கடலூர்க் கோமானே! நீர் கொட்டும் முரசின் ஒலி கேட்டுச் சிட்டாகப் பறந்து வந்து கொண்டுள்ளோம்.

சொட்டும் குருதி படிந்த பட்டயங்களை மனக்கண்ணால் கண்டு நாங்சள் ஊக்கமடைகின்றோம்.

எங்கள் ஊக்கம் ஏக்கமாய் மாறாது என நம்புகின்றோம். எண்ணற்ற தலைவர்களை நம்பிக் கெட்டவர்களான நாங்கள், புண்ணுற்ற நெஞ்சோடு, கண்ஒத்த தலைவராக உம்மை நம்பி, விண் முட்டும் வேகத்தில் வந்து கொண்டுள்ளோம்.

விடுதலைப்பண் எங்கள் நெஞ்சில் ஒலிக்கும் இந்நேரத்தில், ஓய்வை மறந்த உலைக்களங்களைக் காண உம்மை நோக்கி வருகின்றோம்.

எம்மினிய நாடு ஈன்ற ஏந்தலே! எளியவர்களான எம்மை இப்பெரும்பணிக்கு ஏற்று, வரலாறுகாண வல்லாண்மையைச் செய்து முடித்திடுவீர் எனத் தமிழ் அன்னையின் அடிபணிந்து உம்மை வேண்டிக்-கொள்கின்றோம்! வெல்க தமிழ்!

தமிழ் நாடு தமிழருக்கே! —முகிலன், வெங்காளூர்-6

ம. 147 பிறவற்றை உதறித்தள்ளுவோம்!

அன்புள்ள ஐயா,

என்றைக்கும் கிட்டாத பெருமகிழ்வு பொங்க இம்மடல் தீட்டுகிறேன். ஆம்; என்றைக்குமில்லாப் புத்துணர்வும் புத்தெழுச்சியும் கொண்டு எழுதுகிறேன். என்று நான் தென்மொழியைத் தொட்டேனே, சுவைத்தேனே அன்றே உறுதி பூண்டேன் தனித்தமிழ் நாடு கொள்ள, உடல் பொருள், உயிர் அத்தனையும் உவந்தளிப்பதென.

ஆற்றல் மிகு உரைகளைப் படித்துப்படித்து உணர்வுப் பொறியெல்லாம் காட்டுத்தீப்போலக்கொழுந்துவிட்டெரியத்தொடங்கியது.

இன்றோ தென்மொழியில் நேரம் வந்து விட்டது படை முகத்துக்கு வாருங்கள்'' என அழைப்பு விடுத்துள்ளீர்கள்.

என்று இந்த நன்னாள் கிட்டும் என எண்ணி, எண்ணி எதிர் பார்த்து நின்றேன். நாமடைந்த துயரத்தை, பழிதன்னை, வாழ்விலோர் தாழ்மைதன்னைத் துடைத்தெறிய இதோ நான் அணியம்.

கட்டளையிட்டழையுங்கள். தினவெடுத்துத் துடிக்கும் என் தோள்கள் எங்கே எங்கே பகைப்புலம் எனக்கேட்ட வண்ணம் இருக்கின்றன. இத்தனை நாட்களாகப் பயிற்சிகளால் பதப்படுத்திய என்னுடலும், பாவேந்தன் பாக்களால் பக்குவப்பட்ட உள்ளமும் அதற்குரிய செயலின்றி உணவின்றித் தவிக்கிறது.

அதற்கு நல்லதொரு வாய்ப்பு இப்போது கிட்டியுள்ளது. எப்போது தனிநாடு கிட்டுமென ஏக்கமுற்று வாழ்வதைக் காட்டிலும், விடுதலை கண்டிட முயன்று இறத்தலைக் காணல் நன்றன்றோ? நான் மட்டுமல்லன்; என்னுடன் உள்ள நண்பர்களும் அணியம்.

ஐயா,

என்னின் தோல் தொழில் பயிற்சிக்காகநான்தற்போது காளிக் கோட்டத்தில் (கல்கத்தா) உள்ளேன் எனினும் எட்டாம் பக்கலுக்குள் சென்னைக்கு வந்து விடுவேன். வர இயலாத நிலை ஏற்படின் பயிற்சியே வேண்டாமென உதறித் தள்ளி விட்டு ஓடிவர உள்ளேன். மாநாட்டிற்கு ஒருநாள் முன்னதாகவே வந்து விடுவோம்.

அருள் கனிந்து என்னையும் என்னினிய நண்பர்கள் 1. அரிமா வளவன், 2. இளங்கோ, 3. செல்லக்குட்டி இவர்களையும் தங்களின் தொண்டர் குழாமில் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறேன்.

வாழ்க தமிழ்! இவண்

ச. அரிமா அடற்கோ, காளிக்கோட்டம்-46.

ம: 148 திட்டமிட்டுச் செயலாற்றுங்கள்

விடுதலை வேழமே!

தங்கள் இறுதிக் கட்ட விடுதலை முயற்சியைத் தென்னவர் பொன் வேலாம் தென்மொழியின் வாயிலாகக் கண்டேன்.

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்—தோளெங்கள்- வெற்றித் தோள்கள், என முழங்கிய பாவேந்தன் வழியிலே வந்த நான் உடல், உயிர், உடல் வழி, உயிர் வழி உணர்வுகள்—இல்லப் பிணைப்பு எதையுமே சென்ற தென்மொழியில் தாங்கள் குறிப்பிட்டது போல் "தானாக வந்து ஒட்டிக் கொள்ளும் தூசியினும் கீழாக மதிக்கிறேன்." திருச்சி மாநாட்டில் தொண்டர்களை ஒன்றுபடுத்தி வேலைத்திட்டங்களை அறிவியுங்கள் என்னைப்போன்ற அரசு ஊழியர்களை

இறுதிக்கட்டப் போராட்ட வீரர்களாக வரிசைப்படுத்தி அறிவியுங்கள். அம்மாநாட்டில் எவ்வளவு பேர் உயிரையும் இழக்க-போராட அணிய மாக உள்ளனர் என்று பட்டியல் எடுங்கள். மற்ற அரசு-ஊழியர்க ளிருப்பின் விடுதலைப் போராட்டத்திற்கான பொருள் உதவும் அளவை வரையறுத்து ஒப்பந்தம் எழுதி வாங்கவேண்டும். குறிப்பிட்ட இடத்திலில்லாமல் தமிழகமெங்கும் ஒரே நேரத்தில் போராட வேண்டும். ஒவ்வொருவருக்கும் வேலைகளைப் பகிர்ந்தளியுங்கள். பேடிகளைப்பிரித்தெடுங்கள். சில திங்கட்கு அல்லது விடுதலை கிடைக்கும் வரை தென்மொழி முழுதும் உணர்வூட்டும் விடுதலைப் பாசறையாக, குருதியைக் கொந்தளிக்கவைக்கும் தீயேடாகத் திகழ வேண்டும்.

—பழ-மணிவண்ணன்-உறந்தை.

ம: 149 அன்பரோடு வருவேன்

அன்புடையீர் வணக்கம்,

தாங்கள் அறிவித்துள்ள தனித்தமிழ்நாடு விடுதலை மாநாட்டு அறிவிப்பைத் தென்மொழி வாயிலாக அறிந்தேன். நீண்ட நாட்களாக உள்ளத்தில் கனன்று கொண்டிருக்கும் விடுதலை உணர்வுக்கு உணவாக இம்மாநாடு பயன்படும் என்ற எண்ணத்தைப் பெற்றேன். இங்கு விடுதலை உணர்வுடைய ஒருசிலரோடு மாநாட்டுக்கு வர இருக்கின்றேன்.

தங்களன்பன்

புலவர். ந. அண்ணாமலை, நத்தம் திருப்பத்தூர் வட்டம்.

ம: 150 நாளை நமது கையில்

'நேரம் வந்து விட்டது; படை முகத்திற்கு வாருங்கள்' எனும் தொடர் படிக்கப் படிக்க நெஞ்சகத்தே இன்பம் ஊற்றெடுத்தது. இப்பொழுதே நீண்ட நெடு நாட்கள் நம்மைக்கடந்து சென்று விட்டன. இனியும் ஏமாறி இருப்பதோ? நாமெல்லாரும் ஓரினம். தமிழ் என்னும் உணர்வுக்குத்தான் கட்டுப்பட்டுள்ளோம். இடையில் கட்சிப்பாகுபாடுகளால் நமக்குள் பிரிவினை வேண்டா. தாய்மொழி–தாய்நாடு இவற்றைக் காக்கத்தான் துடித்தெழுந்துள்ளோம்-நம்முடைய தனிப்பட்ட வினைகளுக்கன்று. அதனால் நமக்குள் ஏற்றத்தாழ்வு வேண்டா.

ஈகம்! இதுவே நம் முன் நிற்க வேண்டிய தலையாய கடமை. யார் நமக்குள் சிண்டுமுடி வேலை செய்து நமக்குள்ளேயே பூசல்களை ஏற்படுத்த முனைந்தாலும் அவர்களின் முகம்கிழிபட வேண்டுமேயன்றி-அவர்களின் மேனி நாணத்தால் குறுக வேண்டுமேயன்றி–நம் ஒற்றுமையில் விரிசல் விழக்கூடாது

பார்ப்பனப் பூணூல்களும் வடநாட்டுப் "பாகவதர்"களும் இம் மாநாட்டைக் குலைப்பதற்காகத் தம்மாலியன்ற எத்துணைக்குறுக்கு வழிகள் உள்ளனவோ அத்தனையிலும் நுழைந்து வருவார்கள். அவர்களை இனங்கண்டு துரத்த வேண்டும். புல்லுருவிகளை வெட்டிப் புதைக்க வேண்டும்.

அஞ்சா நெஞ்சமும் அளவற்ற ஈகமும் விடுதலையில் எள்ளளவும் நம்பிக்கை விடாதவராகவும் இருக்கும் தமிழ்க்காளைகள், மங்கையர்கள் திரளட்டும், படை முரசு கொட்டட்டும். விம்மட்டும் தோள்கள்! விளம்பட்டும் விடுதலை முழக்கங்கள்!

திருச்சி மாநாடு நம்மின் வரலாற்றைத் திருத்தும் மாநாடாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டைத் தனிநாடாக எல்லா நாடுகளும் ஒப்புதலளிக்கும் நிலைக்கு வித்திடும் மாநாடாகஇருக்கவேண்டும். காவிரி பாய்கின்ற மண்ணிலே தமிழ்ச் செங்குருதி பாய்ந்திடச் சூளுரைப்போம்.

பருவம் வந்து விட்டது பயிர் செய்வோம். படையொடு வாருங்கள். மாநாட்டுத் திடலே நம்மின் பாசறை. வெற்றி நமதென்ற வீர உணர்வோடு வாருங்கள்! நெற்றியிலே அரத்தப் பொட்டிட்டு வாருங்கள்! மனைவி மக்களோடு வாருங்கள்.

மறக்குலம் நம் தமிழ்க்குலம். அந்த மாண்புடன் வாருங்கள். விடுதலை எனும் பேச்சு அதுவே மூச்சு. இன்றே எழுங்கள்! நாளை நமது கையில்!

—கருமலைத் தமிழாழன். தருமபுரி-2.

ம: 151 கட்டளை இடுக

அன்பார்ந்த ஐயா,

வணக்கம். தமிழக விடுதலை மாநாட்டு அறிவிப்பைக் கண்டேன். அணியமாகி விட்டேன். மாநாட்டுச் செயற்குழுவில் எனக்கும் இடமளித்தமைக்குப் பணிந்து நன்றி நவில்கின்றேன். என் கடமைகளை உணர்த்திக் கட்டளை இடுமாறு பணிந்து நிற்கின்றேன்.

தமிழக விடுதலை இயக்கக் கடைத்தொண்டன்.
தரங்கை-பன்னீர்ச் செல்வன்.

ம: 152 ஒல்லும் வகையெல்லாம் உறுதுணை

பெருந்தகையீர்,

வணக்கம். தங்களுடைய மாநாட்டு அழைப்பிதழும் விளக்க அறிக்கையும் வரப்பெற்றேன். தமிழின் நலத்துக்கும் தமிழர் வளத்துக்கும் தொண்டாற்றும் தங்களுக்கு ஒல்லும் வகையெல்லாம் உறுதுணை தந்திட அணியமாக அமைந்துள்ளேன்.

உரிமைமேல் ஆண்மை பாராட்டும் வீர மறவர்களுக்கு வருங் காலம் வாழ்த்துக் கூறுவது உறுதி. எண்ணிய எண்ணியாங்கு எய்து வதற்கு ஏந்தாகத் திண்ணிய உள்ளத்துடன் திட்டமிட்டுச் செயலாற் றும் தடந்தோள் வீரர்க்கு உழைத்திட விழைகின்றேன். எழுதுக; ஆவன செய்குவல். — பா. வளன் அரசு, திருநெல்வேலி-2.

மः 153 திரண்டு கொண்டிருக்கின்றோம்

'படைமுகத்துக்கு வாருங்கள்' - வறியவனுக்கு உணவற்ற காலத்திலிட்ட விருந்தாகும். திருச்சி மாநாட்டுக்குத் திரள் திரளாக வருவதற்குத். திண்டோள் இளைஞர் முதல், திறமிக்க முதுவர் வரை திரண்டு கொண்டிருக்கின்றோம். —அ. கதிரேசன், மேலூர்.

மः 154 சூளுரைத்தேன்

மதிப்பிற்குரிய ஐயா அவர்கட்கு,

"தமிழக விடுதலை மாநாடு" நடைபெறுவது பற்றி நான் தங்களின் 'தென்மொழி' இதழில் படித்தேன். தங்களோடு தோளோடு தோள் நின்று தமிழ் நாடு விடுதலை பெறத்துடிக்கும் பல்லா யிரக்கணக்கான தமிழ் மானம் உள்ளவர்களில் நானும் ஒருவன். திருச்சியில் நடைபெற விருக்கும் மாநாட்டில் நான் தொண்டனாகப் பணியாற்ற விழைகின்றேன். தாங்கள் அதற்காவன செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாடு விடுதலை பெற என் உயிரைக் கொடுக்கவும் தயங்கேன் என்று தமிழ்த்தாயின் மீது சூளுரைத்துக் கூறிக்கொள்கிறேன்.

—சாமி. கருணாநிதி, கல்விராயன்பேட்டை (தஞ்சை)

---

* 'பாவை' என்னும் பெயரில் மீண்டும் நடையிடவிருந்த இதழ் 'வலம்புரி' என்னும் பெயரில் வெற்றி முழக்கமிடுகிறது.

"வலம்புரி"

ஆசிரியர்

புலவர் இறைக்குருவனார்

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்கும் செந்தமிழ்த் தாளிகை.

0 'பாவை' உறுப்பினர்கட்குத் தொடர்ந்து இதழ்கள் விடுக்கப்பெறும் தனியிதழ் 0-25 காசு ஆண்டுக்கட்டணம் 3 உருபா

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

வலம்புரி

(திங்களிதழ்)

மதுரை-10.

விடுதலை முரசம்!

(பாத்தொகுப்பு) —பாவேந்தர் பாரதிதாசன்.

எழுந்து வா!

0 பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?
வையகம் ஆண்ட வண்டமிழ் மரபே
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!

தூங்கும் புலியைப் பறைகொண் டெழுப்பினோம்;
தூய தமிழரைத் தமிழ்கொண் டெழுப்பினோம்!

வீட்டைப் பூட்டு!

0 வீட்டைப் பூட்டிக் குடும்பத் தோடு
நாட்டை மீட்க இன்றே ஓடு!
வெற்றி பெற்றால் மீள்வ தென்று
வீழ்ச்சி யுற்றால் சாவ தென்று
நற்றமிழ் அன்னைக்கு உறுதி கூறு – அட
நாம் தமிழர்! நாம் தமிழர்! – ஏறு!

அன்னை அழைக்கின்றாள்!

0 தீக்காட்டில் வாழ்கின்ற செந்தமிழ் நாட்டன்னை
மீட்க நமையழைக் கின்றாள்!
வீழ்ச்சி யறிந்ததில்லை! வேங்கைகளே எழுவீர்!
வீரம் நமைப்பிரிந்த தில்லை – நம்
தாய்க்கா விலங்கு? தமிழ்க்கா துயரமிங்கு?
தாக்குவீர் தீர்ந்தது தொல்லை!

எது குள்ளக் கருத்து...?

சாதி ஒழிய வேண்டும் என்பதும்
தமிழக விடுதலை வேண்டும் என்பதும்
குள்ளக் கருத்தா? வெள்ளம் போன்ற
தமிழர் நலத்துக்குத் தக்கன வன்றோ?

கேள் கதையை!

சிங்கக் குகையினில் நரிக்கிடந் தந்தோம்!
செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்!
நற்றமிழ் என்பது தில்லிக் காகாது!
நம் அமைச் சர்க்கும் காதுகே ளாது!
புற்றிலே மோதிஞல் பாம்புசா காது;
புறப்படட்டும் புலிகள் இப் போது!

தட்டிக் கழிப்பதா?

தமிழ்விடு தலைப்போரைத் தட்டிக் கழிப்பதா?
தட்டியே மனைவியின் முகத்தில் விழிப்பதா?
தமக்குள்ள பெருமையைத் தாமே அழிப்பதா?
தமையீன்ற தாயின் குடரைக் கிழிப்பதா?

பாடுபட்டதெல்லாம் விழலா?

பாம்பாகச் சீறும் வடவரின் பல்லை
உடைத்தலின்றி
மேம்பாடு கோரி வெறும்பாடு பட்டுக்
கிடப்பதுண்டோ?
நாம்பாடு பட்டதெல் லாம்விழலோ? தமிழ்
நாட்டுரிமை
வேம்பா? அடிமை நிலைகரும் பா? தமிழ்
மேன்மக்களே!

தில்லிக் கழுகின் எண்ணம்!

தில்லிக் கழுகின் பிடியினின்று தப்பவேண்டும்!
தமிழ், தமிழ்ப்பண்பாடு தமிழினம் என்பன
பூண்டற்றுப் போகவேண்டும் என்பதுதான்
தில்லிக் கழுகின் முடிவான எண்ணம்!
இன்னும் சிலநாட்களில்
தெரிந்து கொள்ளும் தில்லிக் கழுகு!

ஓ! தில்லிக் கழுகே!

தமிழுணர்ச்சியைச் சிறிதென எண்ணிவிடாதே
தில்லிக் கழுகே!
உன்னைக் காத்துக் கொள்ள முடியாது!
உன் தருக்குப் போக்கைக் கைவிடு!
அஞ்சு! நடுங்கு!

0 நாயும் ஒப்பாத அடிமை வாழ்வை
நாலு கோடித் தமிழரா ஒப்புவர்?
தாய்நாட் டிற்குத் தமிழர்நாடு – என்று பேர்;
தமிழருக்கே மறவர் என்றுபேர்!

0 அல்லற் கஞ்சோம்! கடுமொழி
சொல்லற் கஞ்சோம்! ஒருசிறை
செல்லற் கஞ்சோம்! அஞ்சோம்
தூக்குக் கஞ்சோம்!

நன்றேடி தோழி!

தன்னுட்டைத் தான்பெருன் உலகில்
எந்நாட்டா னுயினும் இழிந்தவன் தோழி!
முன்னுட்டை ஆண்டவன்; முழுவாழ்வு வாழ்ந்தவன்;
தென்னுட்டான் இந்நாளில் தில்லிக் கடியவன்!
அன்றுடம் சாகின்றுன்; தில்லிக்கே ஆட்பட்டான்!
நன்றேடி தோழி, நாயினும் கேடானுன்!

உன் முதல் வேலே!

ஒன்றே உனதுமுதல் வேலே – இது
காலே – கொடுங்
கோலே – துண்டாய்
ஒடிக்க வேண்டும் திறத்தாலே! – பார்
உன்படை உன்னினம் நில்லதன் முன்னணி
உனக்குப் பகைவர் எந்த மூலே?

போர் தொடங்கிற்று!

பொங்கும் உணர்வால் எழும்தமி ழரசு;
போர்தொடங் கிற்று, கொட்டடா முரசு!

கொட்டடா பறை!

நற்றவம் பலித்ததே ஒற்றுமை பெற்றேம்!
அற்றதே பகைஎன்று கொட்டடா பறை!
உற்றதே விடுதலே கொட்டடா பறை!

நாய் எந்தமூலை!

தமிழர்க்குத் தமிழே தாய்மொழி என்றோம்!
தமிழகம் தமிழர்க்குத் தாயகம் என்றோம்!
தமிழ்நாட்டில் அயலவர்க் கினியென்ன வேலை?
தாவும் புலிக்கொரு நாய் எந்த மூலை?

எல்லாரும் ஒன்றுபடுக!

அன்புடையீரே! அறிவுடைத் தமிழரே!
இருக்கும்போதே விடுதலை எய்தலாம்!
கட்சி வேண்டா! கலகம் வேண்டா!
எப்பிரி விற்கும் ஆட்பட லின்னலே!

*

எல்லா மக்களும் இரும்புக் குண்டுபோல்
ஒன்று படுதல் வேண்டும் இன்றே!
பொதுப்போர்! புதுப்போர்! எழுக! எழுக!
புதிய தோர்தமிழ் உலகம்
இதோ! இதோ! வெல்க! எழிற்றமிழ் நாடே!

போர்க்கு அனுப்புக!

பழித்தவாய் மூடுமுன் வடபுலம் தாக்கும்
பழந்தமி ழகமா அடிமை ஏற்கும்?
வழித்தான் தமிழகச் செல்வம் அனைத்தும்!
மக்களை அனுப்புக அன்னைமீர் போர்க்கே!

ஆரியர் அச்சம்

தமிழ கத்தையும் தமிழையும் மீட்கத்
தமிழர் ஒற்றுமை தாங்கி எழுந்தனர்;
ஆரியர் அதுகண் டலறு கின்றனர்

நமக்கென்ன என்றிருக்க வேண்டா!

தமிழ்நாட்டு விடுதலை, தமிழ்ப்புலவர் விடுதலை!
நமக்கென்ன என்றிருப் பாரோ? — புலவர்
நமக்கென்ன என்றிருப் பாரோ?

பெருமிதம்!

செந்தமிழ் நெஞ்சம் கொதித்ததா இல்லையா?
தில்லி நரிதான் நடுங்கிற்று இல்லையா?
தமிழர் ஒற்றுமை நிறைந்ததா இல்லையா?
தமக்குத் தமிழகம் அடிமையே என்னும்
சழக்கு மரவேர் அறுந்ததா இல்லையா?

தமிழ்நாடு தன்னாட்சி பெறும்!

என் தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்குதல் காண்பேன் தமிழர்
நலங்காண் பேன், நான் நானில மதிலே!

* * * * * *

—பெருஞ்சித்திரன்—

வரலாறு:

0 மண்ணைப் படுத்தினர் அடிமை! தமிழின்
மாந்தரைத் தடுத்தனர் உயர்வில் – நம்
கண்ணைக் கெடுத்தனர் எனினும் உய்வோம்;
கருத்தைக் கெடுத்தனர் அடடா!

0 அடியெடுத்த ஆரியரால் ஆங்கிலரால் வடவரினுல்
அருந்தமிழர் பட்ட தீங்கைப்
படியெடுத்தே அளந்தாலும் பெருந்துலையால் நிறுத்தாலும்
பாரோர்க்குப் பங்கிட் டாலும்
துடிதுடித்த நெஞ்சளவில் துளிதீர்மோ? தமிழினத்தின்
துயர்தீர்மோ? விடிவு நேர்மோ?
இடியெடுத்த நெஞ்சத்தீர்! மறக்குலத்தீர்! தமிழ்மானம்
இலங்குகொடி ஊன்றுவீரே!

உரிமை கருதுக!

0 நமையழிக்க இற்றைநாள் வரும்பகையை
எண்ணிடுக செந்தமிழ்த்தாய் நலம்போ மாயின்
குமைகின்ற அடிமைவாழ் வெத்தனைநாள்?
ஆர்த்திடுக தமிழுரிமை காத்தற் கென்றே!

0 புரிவினைகள் அத்தனைக்கும் புரைவடவர்
தம்மிசைவைப் போய்போய்க் கேட்டுப்
பரிவினுக்குக் காத்திருக்கும் படி, என்ன
வந்ததிங்கே? பணங்கா சுக்கே
நரிவினையைச் செய்திடுவார் நயந்துவரார்;
நறுந்தமிழர்க் குரிமை வேண்டிப்
பிரிவினைக்கு வழிவகுப்போம்; பிறவினைகள்
பிறகென்போம்! பிளிறு வோமே!

எழுக தமிழனே!

0 எழுக தமிழனே! இனநலம் கருதுக!
கொழுந்துவிட் டெரியும்உன் குலைக்கனல் பெருக்குக!
உன்றனை விடுதலைக் கொப்புவித் திடுக!
பின்வரும் தமிழருன் பெற்றியைப் புகழ்வர்!
வடக்குக் கதவினை இறுக்கிப் பூட்டுக!
இடக்குசெய் ஆரிய இனக்கொழுப் புருக்கு!
நாளையே விடுதலை நண்ண
காலையே களிற்றின் கன்றே, கனல்கவே!

0 அன்று தொடங்கி இன்றைய நாள்வரை
அடிமைத் தமிழனே! நீ துயில் எழுந்திட
நின்று கதறிய தொண்டைகள் எத்தனை?
நினைத்துப் புழுங்கிய நெஞ்சமும் எத்தனை?
ஒன்றும் பயனிலை; ஒருசிறு மாற்றமும்
உணர்விலும் அறிவிலும் உருப்பெற வில்லைகாண்!
என்று விடியுமோ இணையிலா விடுதலை
ஏதுங் கெட்டயிவ் விருள்நிறை நாட்டிலே?

0 ஆயினும் நீயோர் ஆரிய அடிமையே!
நாயினும் புழுவினும் நலியும் பிறவியே
இனியா கிலும்விழி; இழிவை அகற்று!
பனியும் மழையும் வெயிலும் பாராது
கடமையைச் செய்நீ! மடமையை உதறு
உடமையை நீபெறும் நாளுமொன் றுண்டே!

எத்தனைநாள் போராட்டம்?

செத்தழிவோம் என்றெண்ணி அஞ்சினிரோ?
தமிழ்மறவீர் சீற்றம் எங்கே?
எத்தனைநாள் போராட்டம் நடப்பதிங்கே?
உயிர்குடிக்க எழுக நாடே!

0 எத்தனைநாள் நாம்பொறுப்ப
தெத்தனைப்பேர் நாமிறப்ப
தெத்தனைநாள் இந்தி எதிர்ப்பதோ?
ஒத்திணையும் எண்ணமில்லை;
ஒன்றிரண்டு பார்த்துவிட
ஊர்ப்படைக்கு நாளொன் றுரைப்பமே!

0 எத்தனை ஆயிரம் காலமடா தமிழ்க்
கின்னல் விளைத்திருப்பார்? – தடை
பண்ண முளைத்திருப்பார்?
... ... உடன்
சிமிழ்த்தெழு வாய்தமிழா! நறுந் தாய்துயர்
சேயும் பொறுப்பதுண்டோ? – இட
நேரம் திறுப்பதுண்டோ?

0 இந்த நொடியினில் ஏற்றம் பெறுதினி
எந்தக் காலத் தெழுவதோ? ஓர்மின்!
வடக்கிலோ மேன்மேலும் அதிகார வீக்கம்!
வருமான வீழ்ச்சியோ தெற்கினைத் தாக்கும்!
இடக்குசெய் இந்தியும் இடையிடைத் தொல்லை
எத்தனை நாளைக்கோ இத்துன்ப எல்லை?
0 பெற்றுவிட வேண்டும் – தமிழகம்
பெற்றுவிட வேண்டும் – தன்னாட்சி
பெற்றுவிட வேண்டும்!

0 ஆடினை ஆயிரம்! பாடினை ஆயிரம்!
ஆர்ப்புற யாத்தனை விடுதலைப் பாயிரம்!
அசைத்ததா பகைவரை உன்றனின் வாயுரம்?
தமிழா! அட தமிழா! – நீ
அழன்றெழு! அரிமா நடையிடு! வினைமுடி!
அதுதான் செந்தமிழ்த் தாயுரம்!

மாடா நீ?

பார்ப்பான் ஒருவன்; பழிவடவன் மற்றொருவன்;
போர்ப்பண் இசைத்துப் புறம்நிற்க, இங்கு நீ
புத்தரிசி தெள்ளிப் புதுப்பால் உலையேற்றிப்
புத்துருக்கு நெய்கலந்து பொங்கியுண்பாய் செந்தமிழா
... ...
ஏடா! தமிழனே என்னிதுகாண் நின்பெருமை
மாடா நீ? இல்லை; மரம்!

வேண்டும் விடுதலை

வடவர்க்கும் பார்ப்பனர்க்கும் வால்பிடித்தே
வாழுகின்ற நிலையைப் பெற்றே
படநிற்கும் நெடுமரம்போல் பாயிழந்த
மரக்கலம் போல் பற்றி ழந்தே
கெடநிற்கும் தமிழா உன் கீழ்மையினை
இன்றுணர்ந்து கிளர்வா யானல்
தொடநிற்கும் பெருந்துயரும் தூளாகும்
விடுதலையும் தோன்று மன்றே!

அமைச்சர்களே!

ஒட்டென்றும் ஒருமையென்றும் உறவாடும்
வடவனுயர் கதவை நாளும்
தட்டென்று தட்டுகின்றீர்! தரும்பொருளால்
தமிழரசை நடத்து கின்றீர்!
மட்டென்று மதித்தீரோ நந்தமிழர்
மானத்தை! மறக்கூட் டத்தை!
வெட்டொன்று துண்டிரண்டாய் "விடுதலையே
வேண்டும்" என விளம்பு வீரே!

... ... அமைச்சர் என்பார்
அரசியலை நடத்துகின்ருர் அவர்மனம்போல்!
மிகக்கொடுமை! அழன்றெ ழுந்தே
முரசறைவீர்! தமிழ்வழங்கும் முழுநிலத்தை
விடுவிப்பீர் முனைவீர் இன்றே!

வடபுலத்தீர்!

முற்றும் மதிகெட்ட மூட வடபுலத்தீர்!
குற்றுமி மேன்மேலும் குத்திச் சலிப்பதுபோல்
ஒற்றுமை என்றும் ஒருமைப்பா டென்றுமே
வெற்றுரை பேசிடுவீர்; வீணே செயல்புரிவீர்!
செற்றுச் சிதைத்திடவே சட்டங்கள் செய்திடுவீர்;
பற்றின் றிதனைப் பகர்கின்றேன் ... ...
... ...
ஒற்றுமையும் பூக்காது; ஒருமையுளம் காய்க்காது;
மற்றிந்த மக்கள் மனங்கனிய மாட்டாது.

ஆண்டுநூ றுனாலும் அன்னைத் தமிழ்நாடு
வேண்டும் விடுதலை எண்ணம் விலக்கோம்யாம்;
பூண்டோம் உறுதி! புறப்பட்டோம் ... ...

வடவர்க்குத் தமிழ்நாடு வாழும்பட் டயமா?
வல்லதோ ரடிமைக்கு வேண்டுதல் நயமா?
மடமைக்குத் தமிழ்நாடு மீண்மேயும் கயமா?
மறந்தரும் விறல்தெய்வம் என்றுமவர் வயமா?

எச்சரிக்கை!

முன்னம் பறித்த முழுமைத் தமிழ் நிலத்தைத்
தன்னால் திருப்பித் தராமல் இருப்பாரேல்
கன்னல் தமிழ்மொழியால் கட்டுண்டு பாய்ந்தெழுந்தே
இன்னல் விளைப்போமென் றெச்சரிப்பாய் பூங்குயிலே!

வித்தாமல் விளையுமோ?

மொத்தப் பெருமல் கவர்பொருள் கள்வன்
முன்வரத் தருதலும் இயல்போ?
வித்தப் பெருமல் விளையுமோ நமக்கே
விடுதலை எனும்உயிர் மருந்தே!

மனைவிக்கும் பிள்ளைக்கும் வாழ்ந்தாய் முன்னாளை!
மற்றிவர் தமைமறந் தெழுவாய்இந் நாளை!
எனையொப்ப விலையெனில் அவரையும் வாளை
ஏந்தச்செய் திட்டுவா! பார், பகைத் தூளை!

இறுதியுரை:

ஆட்டிப் படைக்கும் அரசுக்கும் ஆரியர்க்கும்
ஈட்டியால் செந்தமிழர் தீட்டும் இறுதியுரை!
... ...
காட்டிக் கொடுக்கும் கயவரிங்கு உள்ளவரை
நாட்டின் விடுதலைக்கே நாவசைக்க மாட்டீர்கள்!
கேட்டோம்; கிளர்ந்தெழுந்தோம்; கீழென்றே எண்ணிவிட்டீர்!
கூட்டிலுள்ள ஆவி கொதித்திடுமுன், செங்குருதி
சூட்டினால் பொங்கிச் சுழன்றிடுமுன், இந்நிலத்துக்
கோட்டைக் கடந்துய்வீர்! இன்றேல் கொடிமுகத்து, உம்
கூட்டிற்கு அமைப்போம் குழி!

தமிழன் மண்டியிடான்!

ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை, உள்ளத்தே
அற்றைத் தமிழ்த்தாயிங் காட்சி புரியும்வரை
எற்றைக்கும் எந்நிலத்தும் எந்த நிலையினிலும்
மற்றை இனத்தார்க்கே மண்டியிடான்; மண்டியிட்டான்
பெற்றவர்மேல் ஐயம்; பிறப்பின்மேல் ஐயமெனச்
சற்றும் தயக்கமின்றிச் சாற்று.

நமக்குத்துணை!

சாகின்ற செந்தமிழீர் சாகா விடுதலைக்கே
போகின்ற தெண்ணிப் புறப்படுங்கள் – மாகுன்றத்
தோளும் மணிமார்பும் தூங்காத நல்லுணர்வும்
நாளும் துணையாம் நமக்கு!

வெற்றி வாய்த்திடுக!

0 வேங்கைக் குருளைகளே! வல்லரிமாக் குட்டிகளே!
ஈங்கெழுந்த பேரெழுச்சி இந்நாள் பெருமுயற்சி!
... ...
செந்தமிழை மேல்நிறுத்தி, சீர்த்த பகையழித்தே
எந்தமிழப் பண்பாட்டை, நாட்டை இடைமீட்க
வேண்டி வழுத்துகின்றேன்! வெற்றிவந்து வாய்த்திடுக!
ஈண்டெழுந்து நிற்போம் இணைந்து!

0 ஒற்றுமை பேசி உரிமையை மறுக்கும்
வெற்றுரை அரசின் வீண்செய லெல்லாம்
குற்றுமி போலத் தமிழர்முன் குலைக!
மற்று அவர் ஆட்சி மண்ணுள் புதைக!

0 கூர்த்த மதியுடையார் கூடித் தமிழகமேல்
போர்த்த பகைகடியப் பொங்கினர் என்றேநீ
சீர்த்த அரிமாப்போல் செங்கட் புலியேபோல்
ஆர்த்த முரசாய் அறைவாய் தமிழ் மகனே!

0 உள்ளத் துரமும் உரையில் துணிவும் உரைத்தபடி
வெள்ளத் தணைய துயர்மேல் வரினும் வினைசெயலும்
கொள்ளத் தகுந்த விடுதலை எண்ணமும் கொண்டுவிட்டால்
எள்ளத் தகுந்த பகைவில காதோ இளைஞர்களே!

நாளுமொன் றுண்டு!

—த. அன்பழகன்.

எங்கள் தாய்நிலம் கேட்கிறோம்; இதிலே
உங்கட் கென்ன ஒக்காளம் வந்தது?
எந்தமிழ் நாட்டை இந்தியக் கூட்டினின்
றின்றே பிரித்ததாய் அறிவிப் பீரே!
நன்றே பிறக்கும்! நவில்வேன் அடடா!
ஆட்சிச் சுமைஉமக் கரைப்பங் காகும்!
அறிவிலாத் தமிழர் உமைவிட் டகல்வர்!
மக்கட் பெருக்கச் சிக்கல் தீரும்!
ஒக்க லொடுநலம் மிக்குநீர் வாழலாம்!

முக்கி முணகி நாணிக் கோணி
உருசியா அமெரிக்கா உலக வங்கி
பிரித்தன் சப்பான் பிரான்சு செருமனி
முதலிய நாட்டினின் றுதவி பெற்றுநீர்
எங்கட் களக்கும் பெரும்படி எஞ்சும்!
இந்தியோ எதிர்ப்பே இலாமல் வளரும்!
சமசுக் கிருதம் தலைநிமிர்ந் திலங்கும்!
இந்தியன் என்னும் பெருமைப் பட்டயம்
சொந்தமாய் நீரே சுமந்து திரியலாம்!
இன்னும் பற்பல நன்மைகள் எல்லாம்
உமக்கே சேரும்! ஓ! இந்திய வரசே!

நமக்கறி வுரையா? யாரிவன் நசுக்குவேன்
பாரத ஒற்றுமை பாழாகு மாறு
யார் நீ பேச! ஏதுனக் குரிமை?
பிரிவினைப் பேச்சைச் சட்டம் தடுப்பது
தெரியுமா? என்றே அதிகாரத் திமிரால்
அடக்கி ஒடுக்கி ஆண்டிட முனைவிரேல்,
ஓராண் டாளலாம்; ஈராண் டாளலாம்,
மூவாண்டு, இல்லை, முப்பதாண் டாளினும்
உரிமைக் கனலுள் உறுத்தும் மறவர்
பெருகப் பெருகப் பெரும்போர் தோன்ற
மூட்டை முடிச்சொடு முதுகு வலிக்க
நாட்டைவிட் டோடும் நாளுமொன் றுண்டே!

தமிழ் நிலத்தை விடுவிப்போம்!

தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு.

-- அறிக்கை --

I. மாநாட்டு நடப்பு :—

அ. மாநாடு முந்தைய அறிக்கைகளில் குறிப்பிட்டவாறு விடைத் திங்கள் 28,29 (சூன் 10,11) காரி, ஞாயிறு, திருச்சிராப் பள்ளித் தேவர் மன்றத்தில் நடைபெறும்.

ஆ. சூன் 10 அன்று குமுகாய மாநாடும், சூன் 11-இல் அரசியல் மாநாடும் நடைபெறும்.

இ. மாநாடு நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் முன் கூட்டியே செய்யப் பெற்றுள்ளன. ஆனால் எதிர்பாராத வகையில் மாநாட்டிற்குத் தடை போடப்பட்டாலும் மாநாட்டு முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும். மாநாட்டிற்கு வரவிருப்போர் கட்டாயம் வந்திருந்து அந்த நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள்.

ஈ. மாநாட்டு நிகழ்ச்சிகள் வருமாறு:

சூன் 10 காரி. குமுகாய மாநாடு.

காலை 7 மணி தொடங்கி 12 வரை ஊர்வலம்.
பகல் 2 மணி தொடங்கி இரவு 9 மணிவரை சொற்பொழிவு.
இறுதியில் தீர்மானம் அறிவிக்கப்பெறும்.
இரவு 10 மணிக்கு நாடகம்.

சூன் 11 ஞாயிறு. அரசியல் மாநாடு.

காலை 8 மணி முதல் 12 மணிவரை மாணவர் அரங்கம்.
பகல் 2 மணி முதல் 5 மணி வரை மகளிர் அரங்கம்,
மாலை 5 மணி முதல் இரவு 10 வரை அரசியல் அரங்கம்.
–சொற்பொழிவுகள்–இறுதியில் தீர்மானம், செயலறிவிப்பு.

உ. இரண்டு நாள் நிகழ்ச்சிகளுக்கும் அங்கு வருகின்ற அன்பர்களில் நாளுக்கு ஒருவராக அழைக்கப் பெற்றுத் தலைமையேற்கக் கேட்டுக் கொள்ளப் பெறுவர்.

2. ஊர்வலம்.

அ. ஊர்வலம் சூன் 10 காலை 7 மணியளவில், தேவர் மன்றத்திலிருந்து புறப்பட்டு, மேலரண்சாலை, தெப்பக்குளம், ஆண்டார் தெரு, கோட்டைப் புகைவண்டி நிலைய மேம்பாலம், தில்லைநகர், உறையூர், பெரிய கடைத்தெரு – இவற்றின் வழியாகச் சென்று பகல் 12 மணியளவில் வந்தடையும்.

ஆ. ஊர்வலத்தில் வாய் முழக்கங்களைத் தவிர எவ்வகை வன்முறைச் செயற்பாட்டுக்கும் இடமில்லை. ஒரு சிறு குற்றஞ் சாட்டியேனும் அதிகாரிகள் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள இடமுண்டாகையால், ஊர்வலத்தில் கலந்து கொள்வோர் மிகவும் பொறுப்புடனும், பொறுமையுடனும் நடந்து கொண்டு தம் கோரிக்கை முழக்கங்களை இட்டுச் செல்லுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இ. ஊர்வலத்தில் முன்பகுதியில் முன்னணியினரும், அவர்களையடுத்துப் பெண்டிர் அணியும், அதையடுத்து ஆடவர் அணியும், அதையடுத்து மாணவர் அணியும், அதனையடுத்துத் தொண்டர் அணியும் தொடர்ந்து வரும். ஒவ்வோரணியிலும் ஒருவர் அல்லது இருவர் பக்க வாட்டில் நடந்து வந்து கொள்கைகளை முன் முழக்குவர். அணியினர் அவரைத் தொடர்ந்து முழக்கமிடுதல் வேண்டும்.

ஈ. ஊர்வலம் நால்வர் நால்வராக வரிசைப் படுத்தப் பெறும்.

உ. குழந்தைகளுடன் வரும் பெண்டிர்! அவற்றைத் தத்தம் பாங்கிலேயே அழைத்துச் செல்லக் கேட்டுக்கொள்ளப் பெறுகின்றார்கள்.

ஊ. ஊர்வலத்தில் கொள்கையட்டைகளும், கோரிக்கைப் படாங்களும் தாங்கி வருதல் வேண்டும். விரும்பியோர் மாநாட்டுச் செயலரின் முன்கூட்டிய இசைவுடன் தங்கள் பொறுப்பிலேயே கோரிக்கை அட்டைகளைச் சுமந்து வரலாம். மன்றங்களும், கழகங்களும், படைகளும் தத்தம் மன்ற, கழக, படைப் பெயர்களைத் தாங்கிய படாங்களை முன்னிசைவோடு எடுத்து வரலாம்.

எ. ஊர்வலத்தில் கலந்து கொள்வோர் இடையிடு செய்து புகுதலும், இடைச்செலவில் விலகிச் செல்லுதலும் ஊர்வல

நோக்கைத் தடைப்படுத்து மாதலால், அவற்றைத் தவிர்க்கக் கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். இடையில் வந்து சேர விரும்புவார் ஊர்வலத்தின் இறுதியில் வந்து இணைந்து கொள்க.

ஏ. ஊர்வலத்தில் கீழ்க்காணும் முழக்கங்களை இடுக.

1. தாய்மொழித் தமிழைத் தவறின்றிப் பேசுங்கள்.
2. தனித்தமிழ்ப் பெயரையே தாங்கிக் கொள்ளுங்கள்.
3. கலப்புத் தமிழைக் கடிந்து ஒதுக்குங்கள்.
4. விளம்பரப் பலகையைத் தமிழில் எழுதுங்கள்.
5. 'சாதிப்' பெயர்களைத் தூக்கி எறியுங்கள்.
6. குலப் பட்டங்களைக் குப்பையில் போடுங்கள்.
7. தமிழர்கள் யாவரும் ஓரினம், ஒருகுலம்!
8. யாதும் ஊரே யாவரும் கேளிர்.
9. கோயில் வழிபாடு தமிழில் செய்க.
10. சாதியும் மதமும் வேதியர் புரட்டு.
11. இந்திமொழிக்கு என்றும் இடங் கொடோம்.
12. தனித்தமிழ் நாட்டை அடைந்தே தீருவோம்.
13. தமிழர் நாடு தமிழருக்கே!
14. வடக்குக் காற்று தமிழர்க் காகாது.
15. ஆரியப் பூசல் அறவே ஒழிக!
16. பார்ப்பனப் புரட்டு பயனளிக்காது.
17. அடிமைத் தமிழரே விடிந்தது எழுங்கள்!
18. அரசியல் விடுதலை அடைந்தே தீருவோம்!
19. விடுதலை பெற்ற தமிழகம் வேண்டும்!
20. தில்லி ஆட்சிக்கு எல்லை கட்டுவோம்.
21. பார்ப்பன ஆட்சிக்குப் பாடை கட்டுவோம்!
22. ஏற்றத் தாழ்வுகள் மாற்றி அமைப்போம்.
23. ஏழை பணக்காரன் இல்லாது ஒழிப்போம்.
24. உலகத் தமிழரே ஒன்று சேருவோம்!
25. தமிழ்ப்பெரு நிலத்தை விடுவிக்க வாரீர்!

மேற்கண்ட முழக்கங்களைத் தவிர வேறு முழக்கங்களை இட விரும்புவோர் முன்கூட்டியே மாநாட்டுச் செயலர்தம் இசைவைப் பெறுக. எவ்வாறுனும் ஊர்வலத்தில் எவரையும் பெயர் குறிப்பிட்டு 'வாழ்க' வென்றோ 'வீழ்க' என்றோ முழங்குதல் ஆகாது. அத்தகைய அரசியல் ஆரவாரப் போலி மனப் பான்மைகளை உண்மைத் தொண்டர்கள் அறவே களைதல் வேண்டும்.

ஐ. மாநாட்டின் உண்மை வலிவிற்கு ஊர்வலமே அடிப்படையாகையால் மாநாட்டிற்கு வரத் திட்டமிட்டிருப்பார் அனைவரும் தவறாமல் தம்தம் குடும்பத்துடனும், நண்பருடனும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளக் கேட்டுக் கொள்கின்றோம்.

3. செயற்குழு :

அ. மாநாட்டிற்கென்று ஏற்கனவே அறிவிக்கப் பெற்றிருக்கும் செயற்குழுவிற்கு புலவர். திரு. இறைக்குருவனார் செயற்குழுத் தலைவராகவும், மாநாட்டுச் செயலராகவும் அமர்த்தப் பெற்றிருக்கின்றார்.

ஆ. மாநாட்டுச் செயலரை, குழுவினர் அனைவரும் சூன் 9 வெள்ளிக்கிழமை, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் வந்து பார்த்து அடுத்து நடைபெறவிருக்கும் செயற்குழுக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளக் கேட்டுக்கொள்கின்றோம். நேரமும் இடமும் மடல்வழித் தெரிவிக்கப் பெறும்.

இ. செயற்குழுவில் இடம் பெற்றுள்ளார் தவிர வேறு சிலரும் சூன் 9-இல் நடைபெறும் குழுக் கூட்டத்திற்கு அழைக்கப் பெறலாம். அவர்க்கும் மடல்வழித் தெரிவிக்கப் பெறும்.

ஈ. அவ்வப்பொழுது மடல்வழி இடப்பெறும் கட்டளைகளுக்குத் தக்கவாறு செயற்குழுவினர் இயங்கி மாநாட்டைச் சிறப்புடன் நடத்தி வரலாற்றுப் புகழ் பெற வேண்டிக் கொள்கின்றோம்.

4. கட்டணம் முதலியவை;

அ. நடைபெறவிருக்கும் இருநாள் மாநாட்டிலும் நிகழ்ச்சிகளுக்கு நுழைவுக் கட்டணம் இல்லை. அதுவன்றி முதல் நாளிரவு நடைபெறவிருக்கும் நாடகத்திற்கும் நுழைவுக் கட்டணம் இல்லை.

ஆ. ஆனால், மாநாட்டு நுழைவாயிலில் ஓர் உண்டியல் வைக்கப் பெற்றிருக்கும். மாநாட்டின் நடைமுறைகளில் ஈடுபாடும் அக்கறையும் கொண்ட அருள் நெஞ்சினர் தாம் விரும்பும் தொகை சிறியதாயினும், பெரியதாயினும் அவ்வுண்டியலில் போட்டுத் துணை நிற்க வேண்டிக் கொள்கின்றோம். அவ்வுண்டியல் தொகை இரண்டாம் நாள் மாநாட்டின் இறுதியில் எண்ணி அறிவிக்கப் பெறும்.

5. நன்கொடை :

அ. மாநாட்டிற்கெனப் பொதுமக்களிடம் நன்கொடை தண்டுவ தில்லை என்றும், குறிப்பிட்ட செல்வர் சிலரிடம் மட்டும் கேட்பது என்றும், ஆனால் அவர்கள் விரும்பிக் கொடுப்பதை மட்டும் நன்றியுடன் பெற்றுக் கொள்வதென்றும், அதுவும் நேரில் எவரிடமும் சென்று கேட்க வேண்டுவதில்லை யென்றும் தீர்மானித்து, அதன்படி

திருவாளர்கள்,

1) அரசவயவர். அ. முத்தையா,
2) கி. ஆ. பெ. விசுவநாதம்,
3) குன்றக்குடியடிகளார்,
4) அறிவியல் தொழிலறிஞர் கோ. துரைசாமி, [கோவை]
5) தமிழவேள். பி. தி. இராசன்,
6) அண்ணலார். பு. அ. சுப்பிரமணியனார்,
7) சி. பா. ஆதித்தனார்,
8) கருமுத்து – தியாகராசர்,
9) மதுரை – முத்து.

ஆகியோர்க்கு அறிக்கையுடன் வேண்டுகோளும் விடுத்தோம். ஆனால், அவர்கள் அனைவரும் நாம் எதிர்பார்த்தபடி, தமக் கொன்றும் தெரியாது போலவே அமைந்து விட்டனர். அதன் பின்னரே செயற்குழுவில் உள்ள சிலர்க்குத் தாமே விரும்பிக் கொடுக்கும் நன்கொடைகளை மட்டும் ஆங்காங்குள்ளவரிட மிருந்து பெற்றுக் கொள்ள வேண்டுகோள் விடுத்தோம். சிலரிடம் கடனாகத் தொகை தந்துதவுமாறு வேண்டியுள்ளோம். இம் முயற்சிகளில் நூற்றில் பத்து பயன் பெறினும் நல்லது. இல்லெனினும் தாழ்வில்லை. மாநாட்டை எவ்வாறேனும் நடத்தியே தீர்வதென்று உறுதியுடன் முனைந்து விட்டோம்.

செயற்குழுவை நன்கொடை திரட்டப் பயன் படுத்திக் கொள்ளல் வேண்டும் என்று அன்பர் சிலர் அறிவுறுத்தினர். ஆனால் அந்நிலையை எவ்வாற்றானும் விலக்கியே தீர்வதென்று எண்ணித் தவிர்த்தோம். அதுவே நம் செயற்பாட்டிற்குக் குறை யென்று கூட அவர் பின்னர் பேசுவதாகக் கேள்விப் பட்டோம். ஆனால் அவற்றைப் பற்றியெல்லாம் எவரும் கவலைப்பட வேண்டா. தாமே விரும்பி யளிக்கப் பெறும் நன்கொடையை

என்றும் தலைவணங்கிப் பெற்றுக்கொள்ள அணியமாக இருக்கின்றோம். இவ்வகையில் எவரும் வலிந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டா என்று கேட்டுக்கொள்கின்றோம்.

ஆ. மாநாட்டிற்குள் விடுக்கப் பெறும் நன்கொடையாளர் பெயர் மாநாட்டின் இறுதியில் அறிவிக்கப் பெறும்.

இ. மாநாட்டிற்கென எவ்வகை நன்கொடைப் பற்று முறிகளும் அடிக்கப் பெறவில்லை. எனவே, விரும்புகின்ற அன்பர்கள் மட்டும் ஆங்காங்குள்ள செயற்குழு உறுப்பினர் வழியாகவோ, நேரிடையாகத் தென்மொழிக்கோ தம்தம் நன்கொடைகளை விடுத்து வைக்கக் கேட்டுக் கொள்கின்றோம்.

6. **தீர்மானங்கள் :**

அ. மாநாட்டு இரண்டு நாள் இறுதியிலும் இரண்டு தீர்மானங்கள் போடப்பெறும். தீர்மானங்களின் அடிப்படையில் செயலமைப்புகள் அறிவிக்கப் பெறும்.

ஆ. இரண்டு நாளிறுதியிலும் நிறைவேற்றப் பெறும் இரண்டு தீர்மானங்களைத் தவிர வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பெருவாகையால், அன்பர்கள் எவரும் வேறு தீர்மானங்களைக் கொணர வேண்டாவெனக் கேட்டுக் கொள்கின்றோம். தேவையானால் அறிவிக்கப் பெறும் தீர்மானங்களுக்குத் திருத்தம் ஏற்றுக் கொள்ளப் பெறும்.

7. **நாடகம் :**

அ. மாநாட்டின் முதல் நாளாகிய சூன் 10 அன்று இரவு 10 மணிக்கு நாடகம் நடைபெறும். நாடகத்தின் பெயர் எந்நாளோ? என்பது. அதன் ஆசிரியர், இயக்குநர், நன்கொடையாளர் அனைவரும் திரு. த. அறவாழி (வெங்காளூர்) ஒருவரே!

ஆ. இந்நாடகத்தை நடத்த விருப்பமுள்ளோர் யாவரும் நாடகம் முடிந்த பின்னர் திரு. த. அறவாழி அவர்களைக் கண்டு பேசிக் கொள்க.

இ. எந்நாளோ நாடகம் மிகச் சிறந்த கொள்கை நாடகமாகையால் தவறாமல் அனைவரும் பார்த்து உணர்வு பெற வேண்டுகின்றோம்.

8. உணவு, உறையுள் :

அ. மாநாட்டிற்கு வருபவர்கள் தங்கள் பொறுப்பிலேயே உணவு எடுத்துக் கொள்ளல் வேண்டும். அதற்காகவே இடைவேளை ஒதுக்கப் பெற்றுள்ளது.

ஆ. மாநாட்டிற்கு வருபவர்களுக்கெனத் தங்குமனை ஒன்று மாநாட்டு அருகிலேயே அமர்த்தப் பெற்றுள்ளது. பொதுவாக அங்குத் தங்கிக் கொள்ளலாம். சிறப்பாகத் தங்க விரும்புபவர்கள் தத்தம் பொறுப்பிலேயே விடுதிகளில் இடம் பிடித்துக் கொள்க.

இ. பொதுத் தங்குமனை உள்ள இடத்தைத் தேவர் மன்றத்தில் வந்து கேட்டு அறிந்து கொள்க.

9. தொண்டர் படை :

அ. மாநாட்டில் பொதுத் தொண்டர்களாக உழைக்க அன்பர் பலரும் விருப்பந் தெரிவித்துள்ளனர். அத்தகையார் மாநாட்டிற்கு முந்திய இரவு மாநாட்டரங்கில் செயலாளரை வந்து பார்த்து இசைவு பெற்றுக் கொள்க.

ஆ. பெண்டிர் பகுதித் தொண்டர்களாக இருக்க விரும்பும் பெண்தொண்டரும் அவ்வாறே வந்து இசைவு பெற்றுக் கொள்க.

இ. தொண்டர் படையைச் சார்ந்தார் ஒவ்வொருவரும் தமக்குரிய சிவப்பு மார்பட்டைகளைச் செயலாளரிடம் பெற்றுக் கொள்க.

10. மார்பொட்டிகள் :

அ. மாநாட்டுத் தொடர்புடைய மார்பட்டைகள் பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய வண்ணங்களில் மாநாட்டுச் செயலரிடம் கிடைக்கும். மஞ்சள் வண்ண அட்டைகள் மட்டும் மாநாட்டு வாயிலிலேயே கிடைக்கும்.

ஆ: பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய வண்ண மார்பட்டைகளை முறையே மாநாட்டு முன்னணித் தலைமையினரும், மாநாட்டுச் செயற்குழுவினரும், தொண்டர் படையினரும், மாநாட்டில் பங்குபெறும் பொதுவினர் யாவரும் பயன்படுத்துதல் வேண்டும்.

இ. பச்சை நிற மார்பட்டைகள் 50 காசும், நீல நிற மார் பட்டைகள் 25 காசும், சிவப்பு நிறமார்பொட்டிகள் 15 காசும், மஞ்சள் நிற மார்பொட்டிகள் 10 காசும் ஆகும்.

ஈ. மார்பொட்டிகளின்றி வரும் அன்பர்கள் மன்றத்திற்குள் செல்ல இயலாது. நாடகத்திற்கும் வர இயலாது. ஊர்வலத் திலும் கலந்து கொள்ளல் இயலாது.

உ. பெண்டிரும் மார்பட்டைகளை அணிந்து வரல் வேண்டும். பத்து அகவைக்கு மேற்பட்ட சிறுவரும் மார்பட்டை அணிந் திருத்தல் வேண்டும்.

ஊ. இரண்டு நாட்களுக்கும் ஒரு மார்பட்டை போதுமானது.

11. விளம்பரங்கள் :

அ. மாநாட்டைப் பற்றிய தென்மொழி அறிக்கைகளே அடிப் படையானவை. அதில் வெளியிடப் பெற்ற அறிக்கைகளைத் தனியாகவும் அச்சிட்டுள்ளோம். அவற்றை ஆங்காங்குள்ள அன்பர் சிலர்க்கும் ஊர் வரிசையாக விடுத்துள்ளோம். அறிக்கை கிடைத்த அன்பர்களும், அதனைத் தென்மொழியில் படித்த அன்பர்களும் அவர்களின் நண்பர்களிடமும் பிற தமிழன்பர் களிடமும் செய்தியை எடுத்துக் கூறி விளம்பரம் செய்து மாநாட்டிற்கு நல்லுணர்வுள்ளவர் அனைவரும் தவறாமல் வந்து சேருமாறு செய்ய வேண்டுகின்றோம். முடிந்தவர்கள் ஆங் காங்குத் துண்டறிக்கைகளாக அச்சிட்டுச் சுற்று வட்டாரங் களில் பரப்புக! இயன்றவர்கள் தட்டிகளில் சுருக்கமாக எழுதிப் பொது விடங்களில் வைக்க!

ஆ. இருவண்ணச் சுவரொட்டிகள் செயற்குழு உறுப்பினர் சிலர்க்கு விரைவில் விடுக்கப் பெறும் அவற்றை ஊர்க்கு 5, 10 ஆகப் பரவலாக ஒட்டுக.

இ. ஏற்கனவே செய்தியாளர் கூட்டம் ஒன்று முறையாகக் கூட்டப்பெற்று மாநாட்டுச் செய்திகளை முன்கூட்டியே அறி வித்தும், அரசினரின் கடுமையான எச்சரிக்கையால் எல்லாச் செய்தித்தாள்களும் மாநாட்டை இருட்டடிப்பு செய்து வருகின்ற தாகத் தெரிகின்றது. உண்மையும் திண்மையும் உழைப்பாற்றலும் உள்ள அன்பர்கள் இவை பற்றியெல்லாம் கவலுறாது செய்தியைக் கூடிய மட்டில் தம்மால் இயன்றளவு பரப்புவதே கடமை என்றுணர்ந்து செயற்படக் கேட்டுக் கொள்கின்றோம்.

12. பேச்சாளர்கள், கலந்துகொள்வோர்:

அ. மாநாட்டிற்கு அரசியல் தலைவர்கள், மாநில, நடுவண் அமைச்சர்கள், சட்ட – பாராளுமன்ற உறுப்பினர்கள், சிறப்பு நிலையாளர்கள் ஆகிய அனைவர்க்கும் அறிக்கைகளும் அழைப்பும் அனுப்பப் பெற்றுள்ளன. (தமிழ், ஆங்கில அறிக்கைகள் இதழின் முற்பகுதியில் அச்சிடப் பெற்றுள்ளன.)

ஆ. அழைக்கப் பெற்றவர்களுள் சிலர் வருவதாகத் தெரிவித்துள்ளனர்; சிலர் வாழ்த்தியுள்ளனர்; சிலர் வரவியலாமைக்கு வருந்தியுள்ளனர்; சிலர் இம் மாநாட்டால் பயனே இல்லையென்றும், தன்னலத்திற்காகவே இது கூட்டப்பெற்றதென்றும் கருத்தறிவித்துள்ளனர். அனைவர்க்கும் நம் நன்றி!

இ. பொதுவாகப் பொதுத் தொண்டில் நாம் விளைவைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை; மானமும் கருத வேண்டியதில்லை. உடன் வருபவர்களின் எழுச்சி மழுக்கங்களை நோக்கி நம் கருத்துமுள் திசை திரும்பக் கூடாது. நமக்குச் சரி என்று பட்டவை தவறு என்று பிறராலோ நம்மாலோ கண்டு காட்டப் பெறும் வரை, அவற்றைப் பின்பற்றிய கடமையினின்று நழுவிப் போதல் பொதுத் தொண்டனுக்கு உகந்ததன்று; வீரமுமன்று. வீரமற்ற கோழைகள் கொள்கைப் பாதையில் காலடி வைக்கவே கூசுவார்கள். அவ்வாறு துணிந்து காலடி வைக்கின்றவர்கள் மேல் சேற்றையும் வாரிப் பூசுவார்கள். பொது நிலைத் தேர்வில் பலரும் பலவகையில் கருத்தறிவிக்கலாம். ஆனால் எது சரி எது சரியில்லை என்பது இறுதியாக வந்து சேரும் பயனைப் பொறுத்ததே ஆகும். அக்கால் அதற்கு மாறாகக் கூறப் பெற்ற கருத்துகள் வலிவிழந்து கால வெள்ளத்துள் மூழ்கிக் கரைந்து போகும். எனவே பொதுத் தொண்டுக்கு முன் வருவார் ஒரே கருத்தைத்தான் கூறவேண்டும் என்பதே இயற்கைக்கு மாறானது ஆகும். மிகச் சரியான கருத்து எது என்பதைக் காலம் தேர்வு செய்யட்டும். அதுவரை நாம் எடுத்ததைத் தொடருவோம்.

ஈ. மாநாட்டில் பேச விரும்புவார், மாநாட்டுக்கு முந்திய நாள் இரவிலோ, வந்த உடனேயோ தம் விருப்பத்தை மாநாட்டுச் செயலாளரிடம் தெரிவித்து அதற்குரிய இசைவைப் பெற வேண்டும். முன்னணித் தலைமையினருக்குரிய மார்பொட்டியும் வாங்கி அணிந்து கொள்ளுதல் வேண்டும்.

உ. இசைவளிக்கப் பெற்ற பேச்சாளர்கள் தம் கருத்தை அழுத்தந் திருத்தமாகவும் வெளிப்படையாகவும் சுருக்கமாகவும் பேசக் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர்.

13. அரசினர் குறுக்கீடுகள், தடைகள் :

அ. மாநாட்டைப் பற்றிய எந்தச் செய்தியும் வெளிப்படுத்தப் பெறுமல் இருட்டடிப்பு செய்யப் பெறலாம். ஊர்வலமும் தடை செய்யப் பெறலாம். மாநாட்டிற்கு வருபவர்கள் விரட்டியடிக்கப் பெறலாம்; அல்லது சிறைப் படுத்தப் பெறலாம். ஆனல் எந்த நிகழ்ச்சிக்கும் தொடர்ந்த நடவடிக்கைகளுக்கும் அணியமாக இருப்பவர்களே மாநாட்டில் கலந்து கொள்ள முன்வருதல் வேண்டும். கோழைகளால் விடுதலை வரலாறு எழுதப்பெற்றதில்லை. எனவே எத்தகைய தடையேற்பட்டாலும் அத்தடையை மீறி மாநாடு நடந்தே தீரும். எள்ளளவும் ஐயம் வேண்டா.

ஆ. ஒருவேளை மாநாட்டு அமைப்பாளரோ, செயலரோ, முன்னணியினரோ சிறைப் பிடிக்கப் பெற்ருலும், வேறு வகையில் துன்புறுத்தப் பெற்ருலும், மாநாட்டினர் யாவரும் எவ்வகை வன்முறையிலும் ஈடுபடாது அமைதியாகக் கலைந்து சென்று, ஓர் இடத்தில் கூடி, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றித் தீர எண்ணி – முடிவு கட்டிச் செயற் படுதல் வேண்டும். உணர்வு வயப்படுதலோ, அமைதிக்கு மாருன வகையில் குழப்பம் விளைவித்தலோ கூடாது. பொதுவாகவே அப்படிப்பட்ட நேரங்களில் அடுத்துச் செய்ய வேண்டியவை தக்க முறையில் அங்கு அறிவிக்கப் பெறும்.

இ. இவை போலும் நடவடிக்கைகள் இருக்குமென் றெண்ணி இயல்பாகவே வராமலிருப்பவர்களைப் பற்றி நாம் ஒன்றும் கூறுதற்கில்லை. அவர்களை நம்பியன்று, இவ்வியக்கம் தொடங்கியது. அவர்கள் ஏற்கனவே கழித்தல் கணக்கில் சேர்க்கப் பெற்றவர்களே!

14. வேண்டுகோள் :

அ. காலம் கனிந்து வராத நிலையில் இத்தகைய முனைப்புகளில் ஈடுபடுதல் நன்றன்று என்று தலைவர் சிலர் கருதலாம். ஆனல் காலம் கனிந்து செய்யவேண்டிய வினைப்பாடுகளும் உள; காலத்தைக் கனிய வைத்துச் செய்துமுடிக்க வேண்டிய வினைப் பாடுகளும் உள. காலத்தை வெல்லும் பணி இதுவாகையால், இதற்குக் காலக் கனிவு தேவையில்லை. மனக்கனிவுதான் தேவை.

ஆ. இன்னுஞ் சிலர் போதிய அளவினர் மாநாட்டில் கலந்து கொள்ளாமற் போனால் என்ன செய்வது என்று கவல்வதாகத் தெரிகின்றது. ஏறத்தாழ ஓர் அறுநூறு பெயர்களால்தான் பிரஞ்சுப் புரட்சியே நடந்தது என்பது வரலாறு. உருசியப் புரட்சியும் மிகுமுனைப்பாளர் ஒரு சிலரைக் கொண்டுதான் நடை பெற்றது. பொதுமக்கள் கலந்து கொள்ளாத புரட்சி வெற்றி பெற்றதில்லை என்பார் சிலர். பொதுமக்கள் படை மறவர்களல்லர். அவர்கள் ஒருமுகமாக நின்று முனைந்து போராட வேண்டிய நிலை என்றைக்கும் வராது. வராத அந்த ஒரு நிலைக்காக நாம் ஏக்கம் பிடித்துக் கிடக்க வேண்டுவதில்லை. எல்லாரும் தண்ணீர்க் குடத்தைத் தத்தம் தலைகளில் வைத்துக் கொண்டு அணியமாக இருக்கும் பொழுது பார்த்துத் தீப்பிடிப்ப தில்லை. தீப்பிடித்த வுடன் நீர் நிலை நோக்கி ஓடும் முயற்சியே பொது மக்க ளுடையது. கடந்த வங்கப் புரட்சியின் தொடக்கம் வேறு; முடிவு வேறு. விடுதலைப் புரட்சி ஒவ்வொன்றும் ஒருவகைப் பட்டது. எனவே ஒன்றோடொன்றை ஒப்பு வைத்து நோக்கத் தேவையில்லை. அப்படிப் பட்டவர்கள் காலத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கட்டும், நாம் அவர்களுக்கெனக் காலத்தைக் கனிவித்துக் காட்டுவோம்.

இ. இறுதியாக எல்லாரிடமும் நாம் வேண்டிக் கொள்வது என்னவென்றால், தென்மொழிக் குடும்பம் ஒவ்வொன்றும் தவறாமல் திருச்சியில் கூடவேண்டும் என்பதுதான், வாழ்க்கை யிலேயே இந்த இரண்டு நாட்கள் திருச்சியை நோக்கிப் போய் வருவதால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடுவதில்லை. அதனால் நம் காலும் தேய்ந்து விடாது; மனமும் கெட்டுவிடாது; கண்ணும் இருண்டு விடாது. உலகம் முழுவதுமே தூய்மையாகட்டும்; அதன் பின் பயனும் மகிழ்ச்சியும் தாமே வரும் என்பவர்கள், ஆக்கி வைத்த சோற்றில் பங்குக்கு வருபவர்கள். அப்படிப் பட்ட பங்காளிகள் கரையிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கட்டும். நாம் முழுகிக் கொண்டிருக்கும் கப்பலைத் தூக்கி நிறுத்த முயற்சி செய்வோம். முடிந்தால் முடியட்டும்; அல்லது மூழ்கி மடிந்தால் மடியட்டும். எப்படியோ பொழுது விடிய வேண்டும். யார் அழுது வடிந்தால்தான் என்ன? இருக்கப் போகிறவர்கள் மட்டும் இங்கேயே நிலைத்து விடப் போகின்றார்களா, என்ன? அடிமை உடலில் குடியிருப்பதை விட உரிமை மண்ணில் தலைசாய்வது நல்லது.

ஈ. இனி, முனைகின்ற எல்லாரும் தகுதியுள்ளவரா, உரனும் உண்மையும் வாய்ந்தவரா, இல்லை உலுத்துப்போன உள்ளமா என்றெல்லாம் ஆய்ந்து கொண்டிருக்க முடியாது. அவ்வாறு ஆயவேண்டிய நேரமும் இதுவன்று. இக்கால் எல்லாமும் பறி போய் விட்டன. இருப்பது ஒருசில உணர்வுகள்; உள்ளங்கள். இவற்றையும் தொலைக்கடிக்க நாம் விரும்ப வில்லை. இருப்ப வற்றைக் கொண்டு ஒருகை பார்த்து விடுவது என்று முனைந்து விட்டோம். நம்மில் சிலர் இணைந்தும் விட்டோம். இப்பொழுது போய் உள்ளம் சரியா, உரம் சரியா என்று ஆய்ந்து பார்த்து அளந்து சொல்வது யார்? எந்த அளவுகோலைக் கொண்டு?

ஆகவே, அன்பர்களே! திருச்சியில் ஒருமுகமாகக் கூடி ஒரு முடிவு செய்வோம், திட்டமிடுவோம். அதன்பின் தொடர்ந்து போராடுவோம். தமிழகப் பிரிவினையை விரும்பும் உள்ளங்கள் தவறாமல் வந்து சேர்க! சேர்க! என்று வேண்டிக் கொள்கின்றோம்.

அன்பன்,

பெருஞ்சித்திரன்

மாநாட்டு அமைப்பாளன்,

மறைமலையடிகள் மன்றத்தின் விளக்க அறிக்கை

மீனத்திங்கள் தென்மொழியில் மொழி நூல் மூதறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் மன்ற நன்கொடை பற்றி வெளியிட்டிருந்த அறிக்கையில் கண்டுள்ள செய்திகள் அனைத்தும் உண்மையே. மன்ற வழி நன்கொடை வழங்குவது உறுதிசெய்யப் பெற்று விட்டமையால் உரிமையோடு, "இது நாள் வரை வழங்கிய குறிப்பிடத்தக்க நன்கொடைகள்" என்னுந் தலைப்பில் இதற்கு முத லிடம் கொடுத்து வெளியிட்டோம். மேலும் இதைக் கண்ணுறும் பிற (அமைப்பாளர்களும்) மன்றத்தார்களும் நன்கொடை வழங்குவர் என்றும் நாங்கள் கருதினோம். நேரில் எம் மன்றத்தைப் பாராட்டும் அன்பர்களிடம் "நன்கொடை எப்பொழுது வழங்கவுள்ளோம்" என்பதை விளக்கமாகக் கூறிவருகிறோம். பொய்யான செய்தியை வெளியிட்டுப் புகழ் தேடிக்கொள்ளும் நிலையில் மன்றம் இல்லை. எனவே, தந்தை பாவாணரின் செ. சொ. அ. வெளியீட்டுத் திட்டத் திற்குத் திட்ட இறுதியாண்டு உரு. 10,000/- வழங்குவோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன், தென்மொழி வளர்ச்சிக்கு வழங்கிய நன்கொடைச் செய்தியை, வழங்குவதற்கு ஆறு திங் களுக்கு முன்னரே வெளியிட்டு விட்டோம் என்பதையும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன், —கா. இளமுருகன், செயலாளர்.

லாக்கள் இல்லாத விடுதலையடையவிருக்கும் வியட்நாமையோ, புரட்சிப் படையில்லாப் புதுப்பொதுவுடைமை உருசியாவையோ, வல்லாட்சி கண்ட கமால் பாட்சா இல்லாத நோயில்லாத துருக்கியையோ, தற்கொலைப் படையில்லாத (முக்திபகினி) தங்க வங்கத்தையோ உலக வரலாறு காண இயலுமா? முன்னொரு தடவை இந்தியெதிர்ப்பு வீரவுரை பகர்ந்துவிட்டுச் சிறைசென்று மன்னிப்பும் கேட்டு முன்னறிவில்லாப் பயனற்ற, விளம்பரத்தன்மையாய கோமாளிப் போக்கைக் கைவிட்டுச் செம்மையான செங்குருதிச் செயல் முறையில் சென்றிடுவீர்! வென்றிடுவீர் வடவாரிய வாலாட்டம்! நிரப்பிடுவீர் தமிழக வரலாற்றுப்பொன்னேட்டை. கடவுள் இல்லை.

—விடுதலை விரும்பி – தஞ்சை மாவட்டம்,
பகுத்தறிவாளர் கழக ஒன்றியம், தஞ்சை.

0:324: அரிமாக்களின் முழக்கம் நரிமாக்களுக்குப் பொறுமையைத் தான் உண்டு பண்ணுகிறது; அதனால்தாம் அவற்றிற்கு அல்லும் பகலும் ஊளையிடுவதே பாடாக இருக்கிறது! போய்த் தொலையட்டும்!! அஃதின்றைக்குப் புதிதில்லையே? அரிமாக்களால் இந் நரிமாக்கள் அழிவது திண்ணமே! மாநாட்டுச் செய்தி மகிழ்வூட்டும் செய்தியாகவும் உய்தியூட்டும் மாண்நாட்டுச் செய்தியாகவும் அமைந்துள்ளது! —ஒளியவன், கரூர்.

0:325: இங்கிருக்கின்ற வயிறு நிரப்பும் தமிழன் இன்னும் எத்தனைக் குத்திக் காட்டினாலும் அவனுக்குச் சூடு, மானம், நல்ல அரத்த ஓட்டம் என்பவை எல்லாம் என்ன விலை என்றுதான் இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கின்றான். அவனை வழி நடத்திப் போகும் தலைவர்களும், வழிகாட்டிகளும் அப்படி. தலைவன் எப்படி அப்படித்தான் தொண்டனும் இருப்பான். தமிழனைத் தமிழனே வெட்டிக் குழி தோண்டும் காலம் இதுதான் போலும்.

—க. க. ஆறுமுகம், கருக்கம் பாளையம்.

0:326: அன்புள்ள பெருஞ்சித்திரனார், அவர்களுக்கு வணக்கம். உங்கள் கடிதமும் நீங்கள் அனுப்பிய அழைப்பு அறிக்கையும் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. எனக்கு உடம்பு சரியில்லாததால் வர முடியாமல் இருக்கிறேன். மன்னிக்கவும். மற்றப்படி மாநாடு நன்கு நடைபெற எனது வாழ்த்துக்கள். —கோ. துரைசாமி, கோவை.

0:327: அரும்பெறலன்ப! அட்டையும் தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாட்டு அழைப்பிதழும் வந்தன. ......மாநாடு முழு வெற்றியாய் நடைபெறுக. —ஞா. தேவநேயன், காட்டுப்பாடி.

0:328: பேரன்புடையீர், வணக்கம், மாநாட்டுச் சிறப்பழைப்பில் எனது பெயரையும் இடம் பெறச் செய்துள்ளீர்கள். ஊன்று கோலின் துணையின்றிப் பத்தடிகூட நடக்க முடியாத நிலையில் இருக்கும் என்னால் திருச்சி வரை வர முடியாதே என்பதை எண்ணிப் பெரிதும் கவலையோடுள்ளேன். மாநாடு வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்கள். நன்றி மறவாத, —அடிகள், காஞ்சிபுரம்-3.

0:329: பேரன்புடைய ஐயா அவர்கட்கு, வணக்கம் பல. ஐயா தாங்கள் காரைக்குடி அழகப்பர் தமிழ் மன்றத்தில் கும்பத் திங்கள் கச ஆம் நாள் ஆற்றிய சொற்பொழிவுக்கு முன்னும் பின்னும்

[அடுத்த பக்கம் பார்க்க]

சிறியேன் தங்களோடு உரையாடியதன் விளைவே இம்மடல். அடியேன் தங்களைக் காணும் முன்னும் மதுரை மாநாட்டில் கண்ட பின்னும் தங்களின்பால் பற்றும் பிடிப்பும் கொண்டிருந்தேன். வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் விடிமீன் என்றும் அடிமைத்தளையறுக்க வந்த பெருந்தலைவன் என்றும் விடுதலைப் போராட்டத்திற்கு வித் தூன்றிய செம்மல் என்றும் என்னுள் ஓர்ந்திருந்தேன். தங்களுடைய தலைமையின் கீழ்த் தனித்தமிழ் இயக்கத்திற்குத் தொண்டாற்ற அணியமாய்நின்றேன்; பெருமைப் படுகின்றேன். ஆனால் தங்களைக் கண்டு பேசிய பின்றை யென்னுளத்தில் ஓர் எண்ணம் ஆழப் பதிந்தது. அதுதான் தாங்கள் தனி மாந்த வாழ்வியலிலும் எனக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளீர்கள் என்பது. தங்களோடு உரை யாட்டு நிகழ்த்து முன் யான் தங்களை என் இயக்கத்தின் தலைவன் என்று மட்டுமே உன்னினேன். தங்களோடு பேசிய பின்புதான் தனிமாந்த வாழ்வியலிலும் எனக்குத் தலைவனாகவும், வழிகாட்டி யாகவும் விளங்குகின்றீர்கள் என்பதை ஓர்கின்றேன்: கன்னித் தமிழுக்குத் தொண்டு செய்யும் உங்களோடு கலந்து தோளோடு தோள் நின்று பணியாற்ற விழைகின்றேன். ஐயா, என்னுள் ஏதேனும் ஒரு திறமையோ ஆற்றலோ இருக்குமெனின் அதுவும் தங்களால் விளக்கம் பெறுமெனின் யான் என்னையே தருவதற்கு அணியமாக இருக்கிறேன். புத்தம்புதுத் தமிழகத்தைப் பார்த்துவிடத் துடிக் கின்றேன். குமுகாயத்தின் இழிவுகளைத் துடைத்துவிடத் துடிக் கின்றேன். மூடத்தனத்தால் முடைநாற்றம் வீசுகின்ற நம் நாட்டைத் திருத்தி அதன் அடிமைத் தளையகற்றிட விழையும் தங்களோடு ஒருங்கிணைந்து பணியாற்றுவன் என்று உறுதி கூறுகின்றேன். —அ. முத்துராமலிங்கம், குளமங்கலம், மதுரை.

0:330: 'இல்லையும் இருக்கிறதும்' என்ற கற்பனை ஊற்றுக் கட்டுரை எழுத்துக் கணக்கியல் முறையில் அமைந்திருப்பதை எடுத்துக்காட்டலாம். இல்லையும் இருக்கிறதும் ஒன்றேதான். ஆனால் மாறுபட்ட குறியீடுகளைக் (Opposite Signs) கொண்டவை. இவை யிரண்டும் சுன்னத்திற்கு (Zero) நேரானதாகும். இவ்வுண்மை அக் கட்டுரையின் முதலிரண்டு அடிகளின் மூலம் தெரிய வருகிறது. மேலும், அக்கட்டுரையிலுள்ள ஒவ்வோர் அடியினையும் ஒரு நேர் பாட்டிற்கு (Equation) ஒப்பிடலாம். ஒவ்வொரு நேர்பாடும் ஓரே இலக்கினை நோக்கியும் ஆனால் பல்வேறு கோணங்களிலிருந்தும் வருகிறதைக் காணமுடிகிறது.

அக்கட்டுரையிலுள்ள மாபெரும் நுட்பமென்னவெனில் சுட்டுச் சொல் இல்லாததே. சுட்டுகின்ற சொல் போட்டோமேயானால் கட்டுரை "இஃது இல்லை. இஃது இருக்கிறது," என்ற இரண்டடிகளில் முடிந்து விடும். சுட்டுச்சொல் இல்லாததால் கட்டுரை இரண்டு பக்கங்களை எட்டிவிட்டது. மெய்ப்பொருளைச் சுட்ட முடியாதென்பதைச் சுட்டு முகத்தான் அக்கட்டுரை வரையப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. "உரையற்ற தொன்றை உரை செய்யும் ஊமர்காள், கரையற்ற தொன்றைக் கரைகாணலாகுமோ?" என்ற திருமூலரின் சொன் மணிகள் ஈண்டு நினைவு கூரற்பாலது. —சி. இராசாங்கம், தஞ்சை-1.